விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 240 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 31 புதன்கிழமை (16.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





### செப்ரெம்பர் 15 முதல்
## தலைமன்னார் - கொழும்பு கடுகதி ரயில் சேவை
### மடுவில் ஜனாதிபதி ரணில்



(மன்னார்)

எதிர்வரும் செப்ரெம்பர் 15 முதல் தலைமன்னாருக்கும் கொழும்புக்கும் இடையில் கடுகதி புகையிரத சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



மன்னார் மடு மாதா திருவிழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு.

## சீனித் தொழிற்சாலை வவு.வில் அமைக்கப்படும்
### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(மன்னார்)

வவுனியாவில் சீனித் தொழிற்சாலையொன்றை அமைக்கத் திட்ட 15

## காணாமல்போனோர் அலுவலகத்துக்கு
### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்திற்கு வழிகாட்டு நெறிகளை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க காணாமல்போன ஆட்கள் பற்றிய அலு 15

### 13ஆவது திருத்தம் மூலம்
# அதிகாரப் பகிர்வை அமுலாக்க வேண்டும்
### மகா சங்கத்தினர் முன்னிலையில் சஜித்



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டமூலம் அதிகாரப் பரவலாக்கத்தை அமுலாக்க எதிர்பார்ப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மகா சங்கத்தினர் முன்னிலையில் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## 13ஐ பலவந்தமாக அமுலாக்க முடியாது
### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

பாராளுமன்றம் இணங்காவிட்டால், 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் பலவந்தமாக முழுமையாக அமுல்படுத்தாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். 16



## மாங்குளத்தில் கோர விபத்து 3 பேர் பலி; 8 பேர் படுகாயம்

(மாங்குளம்)

மாங்குளம் - பனிச்சங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த வான் விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் சாவகச்சேரியைச் சேர்ந்தகலைவாணன் (வயது-46), முல 15


### நாளை முதல்
## பாடசாலைகளுக்கு 2ஆம் தவணை விடுமுறை

(கொழும்பு)

அரச பாடசாலைகள் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைக்கான முதற் 15

### வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி
## கூலிப்படையை ஏவி கல்வியங்காட்டில் தாக்குதல்
### மோ.சைக்கிள் தீக்கிரை





16ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் சிசுவுக்கு சிகிச்சை அளிக்க தாதியர் மறுப்பு
### விசாரணைக்கு ஆளுநரால் குழு நியமனம்


(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் சிசுவொன்றுக்கு சிகிச்சை அளிப்பதில் தாதியர் நடந்துகொண்ட விதம் மற்றும் தாதிய உத்தயோகத்தர்கள் தமது கடமையை சீராக செய்யவில்லை என தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை விசாரணை செய்ய வட மாகாண ஆளுநர் தலைமையில் மூவர் கொண்ட குழு வட 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்

# நன்றி தெரிவிக்கின்றோம்



மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினராகிய எமது கோரிக்கைக்கு அமைய

**கடற்றொழில் அமைச்சர்**

## கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா

அவர்களது முயற்சியினால் மயிலிட்டித்துறை துறைமுகப் பகுதியில் இருந்த அணைக்கட்டு கற்களை தெணியம்மன் கோயிலடி வியாபாரி மூலைப் பகுதி கடல்வான் பகுதிக்கு அடுக்குவதற்கு பெற்றுத் தந்தமைக்கு சங்கம் சார்பிலும் மயிலிட்டித்துறை மக்கள் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (C-7072)

**மயிலிட்டித்துறை க.தொ.கூ. சங்க நிர்வாகத்தினர்**

# வேலணை சிற்பனையில் இலவச குடிநீர் விநியோகம்




வேலணை சிற்பனையில் விஜயலஷ்மி ஞாபகார்த்த குடிநீர் வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் (14) ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இலவசமாக வழங்கப் படும் இச் சுத்திகரிப்பு குடிநீர் திட்டத்தை தனது தாயின் ஞாபகார்த்தமாக திருச் செல்வம் மணிவண்ணன் நிர்மாணித்துள்ளார்.

சிற்பனை முருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ உமேந்திரக் குருக்கள் இத் திட்டத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (ம)

# தென்னையை பாதுகாக்கவும்

(கொழும்பு)

உள்ளூர் தேங்காய் கைத்தொழிலை பாதுகாக்கும் வகையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் அளவை கட்டுப்படுத்த வேண்டும் என தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தென்னந்தோப்புக்களை சேதப்படுத்தும் விலங்குகளை பிடித்து சரணாலயங்களுக்கு விடுவதற்கு அமெரிக்க விலங்கு அமைப்புகளின் உதவியுடன் யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


## கனடா சுற்றுலா விசா

சுற்றுலா விசா மூலம் கனடாவிற்கு மிக குறுகிய காலத்தில் குறைந்த செலவில் செல்வதற்கு எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.
போலந்து நாட்டில் வேலைவாய்ப்புகள் உள்ளன.
தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

**Hybrid International Hub(pvt) ltd Jaffna**
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
**021 222 1265, 076 250 0098**
(C-7070)


# மரண அறிவித்தல்



## மரியநாயகம் செல்லையா

( கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபன முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர் பகுதி நேர ஆங்கில, சிங்கள ஆசிரியர் )

நல்லாயன் வீதி இளவாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் செல்லையா அவர்கள் 15.08.2023 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் எசேக்கியேல் செல்லையா - லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் சூசை - யக்கோவா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரிமலர் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றெறன்ஸின் அன்புத் தந்தையும் ஜசிந்தாவின் மாமனாரும் ஜஸ்வந், ஜஸ்வந்தி ஆகியோரின் பேரனாரும் சில்வேஸ்ரர், பொலின், ஞானப்பிரகாசம், றோஸ் டெய்சி, நியூமன் மற்றும் காலஞ்சென்றவர்களான மாட்டின் செல்லையா, டோமினிக் செல்லையா, றோசம்மா, அன்னம்மா, ஜீவமணி, லியோ ஆகியோரின் அன்புச் சகோதரனும் மேரி பற்றிமா, சேவியர், அருட்தந்தை அன்ரன் ஜோர்ச் (பங்குத்தந்தை-பளை) ராஜம், ஜெபநேசன் மற்றும் காலஞ்சென்ற அல்போன்ஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி இரங்கல் திருப்பலி 17.08.2023 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித யூதாததேயு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**செனியூட் இளவாலை**
**தொ.பே : 077 808 1142**
**074 185 9071** (16725)

தகவல் - குடும்பத்தினர்

# 1ஆம் ஆண்டு நினைவு தினம்

அமரர் திருமதி

## அருந்தவநாதன் திலவகதி

தோற்றம்:-22.08.1954
மறைவு:- 29.07.2022



ஆண்டொன்று
மறைந்துவிட்டது அம்மா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்!
மறையுமா உங்கள் நினைவின் பாசம்!
எங்களை நிர்க்கதியாய், அநாதையாய்
பரிதவிக்க விட்டு விட்டு
எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா?
உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் தொடரும்.

இல.137, விவேகானந்த நகர், கிளிநொச்சி. (C-7069)

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் மயில்வாகனம் குகதாசன்

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர், உற்றார், உறவினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



சிறிலங்கா இன்சூரன்ஸ்(இ.கா.கூ)
வடபிராந்திய வெளிக்கள ஊழியர் நலன்புரிச் சங்கம்
**தலைவர்**
**தேனாவளவு**
**கரணவாய் கிழக்கு,**
**கரவெட்டி.** (C-7074)

077 354 5323
021 226 5435

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரத்தை தொட்ட எலுமிச்சையின் விலை

(கொழும்பு)

சந்தையில் எலுமிச்சை மற்றும் வாழைப்பழங்களின் விலை அதிகரித்துள்ளது.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக, விளைச்சல் குறைவடைந்தமையினால், இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, ஒரு கிலோகிராம் எலுமிச்சையின் விலை சுமார் ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

அதேநேரம் ஒரு கிலோகிராம் கதலி வாழை 130 ரூபாவுக்கும் ஏனைய வகை வாழைப்பழங்கள் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# அடுத்த ஆண்டில் அரசாங்க சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்படமாட்டாது

## திறைசேரி அறிவிப்பு

**(கொழும்பு)**

**எதிர்வரும் ஆண்டில் அரசாங்க சேவையில் புதிதாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட மாட்டாது என திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன அறிவித்துள்ளார்.**

புதிய ஆட்சேர்ப்புகள் கிடையாது என்பதனால் இதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு வரவு-செலவு திட்டத்தின் தயாரிப்பு பணிகள் குறித்த வழிகாட்டல்களை வெளியிடும் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி அரச ஊழியர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அடுத்த ஆண்டுக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தி யுள்ளார்.

அத்துடன் வாகன கொள்வனவு தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடும் தொடர்ந்தும் நீடிக்கும் எனவும் இதேவேளை அடுத்த ஆண்டில் அரசாங்க நிறுவனங்களுக்கு தளபாடங்கள், காரியாலய உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களை கொள்வனவு செய்வதனை முடிந்த அளவு வரையறுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டில் ஊழியர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சுற்றுநிருபங்களுக்கு அமைய அத்தியாவசியமானது என்றால் மட்டும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# 25 ஆயிரம் குடும்பங்களுக்கு சூரிய கலங்கள் மூலம் மின்சாரம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் 25,000 குடும்பங்களுக்கு சூரிய கலங்கள் மூலம் மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

குறித்த திட்டம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த திட்டம் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சு மற்றும் மின்சக்தி, எரிசக்தி அமைச்சகத்தின் கூட்டு திட்டமாக செயற்படுத்தப்படுகிறது. (நி-5)

# உயர்கல்வி அமைச்சின் அனுமதியின்றி விரிவுரையாளர்கள் வெளிநாடு செல்ல முடியாது

## பல்கலை பேராசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் அறிவிப்பு

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சின் அனுமதியின்றி பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாது என பல்கலைக்கழக பேராசியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு ரகசியமாக வெளிநாடுகளுக்கு பேராசிரியர்கள் எவரேனும் சென்றிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என அதன் பேச்சாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்ஹ கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடத்திற்குள் 26 வீதமான பல்கலைக்கழக பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடாது

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

"இனவாதக் கருத்துக்கள் ஊடாக வன்முறையைத் தூண்ட இந்த நாட்டில் எவருக்கும் இனி அனுமதி இல்லை" என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.


இனவாதத்தாலும் வன்முறையாலும் மீண்டும் இங்கு இரத்த ஆறு ஓடக் கூடாது என்பதில் ஜனாதிபதி உறுதியாகவுள்ளார் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.


"இன, மத பேதமின்றி நாம் செயற்பட வேண்டும். நாட்டின் பிரஜைகள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

அப்போதுதான் நல்லிணக்கம் இங்கு நிரந்தரமாகும்" எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு -கிழக்கில் விகாரைகள் மற்றும் பிக்குகள் மீது கை வைக்க முயன்றால் அங்குள்ளவர்களின் தலைகளுடனேயே களனிக்குத் திரும்பவுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே பிரதமர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# செஞ்சோலை நினைவு நாள் பாரிஸில் அனுஷ்டிப்பு





(பாரிஸ்)

வள்ளிபுனம் செஞ்சோலை சிறுவர் வளாகத்தின் மீது இலங்கை வான்படையினர் நடத்திய தாக்குதலில் சாவடைந்த 61 மாணவிகளின் 17 ஆவது ஆண்டு நினைவுநாள் பாரிஸ் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (நி-5)

# 13 ஆவது திருத்தத்தை வடக்கு மக்கள் விரும்பவில்லை

## அஸ்கிரிய பீடம் தெரிவிப்பு

(கொழும்பு)

பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை வடக்கு மக்கள் விரும்பவில்லை என்பதை அரசியல் பொறுப்புள்ளவர்கள் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் பிரதிப் பதிவாளர் நாரங்கபானவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதார, கல்வி, சுகாதாரத் தேவைகள் என்பது நாட்டின் ஒட்டுமொத்தப் பிரச்சினை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் இந்திய அரசாங்கத்தினால் பலவந்தமாக எமது நாட்டுக்கு வழங்கப்பட்டதேயன்றி இந்நாட்டு மக்களின் தேவைக்காக ஸ்தாபிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்போதும் கூட வடக்கு-கிழக்கில் சிங்கள மக்களுக்கு நடக்கும் பல்வேறு அநீதிகள் பற்றி யாரும் பேசுவதில்லை. அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் புத்த சாசன அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட விகாரைகள் கட்டப்படுவதைக் கூட அப்பிரதேசத்தின் தமிழ் அரசியல் தலைவர்களின் செல்வாக்கின் பேரில் அதிகாரிகள் எவ்வாறு செயற்பட்டுள்ளனர் என்பதை காண முடிகிறது என அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிஸ் தமிழர் இல்லம் அண்மையில் அனைத்துலக ரீதியாக நடத்திய தாச்சி இறுதிப் போட்டியில் குமரநகர் ஒன்றிய வெளிநாட்டு அணியினர் வெற்றி பெற்று கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். கைதடி நண்பர்கள் அணியை எதிர்த்து குமரநகர் ஒன்றிய வெளிநாட்டு அணியினர் மோதினர். இதில் கோடீஸ் தலைமையிலான குமரநகர் ஒன்றிய அணியினர் 1:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றிருந்தனர். (படம்: சுபேசன்)

# சவுதிஅரேபிய கழகத்தில் இணைகிறார் நெய்மார்



பிரேஸில் கால்பந்தாட்ட நட்சத்திரமான நெய்மார், சவுதி அரேபியாவின் அல் ஹிலால் கழகத்தில் விளையாடுவதற்கு இணங்கியுள்ளார்.

31 வயதான நெய்மார், கடந்த 6 வருடங்களாக பிரான்ஸின் பரீஸ் செயின்ற் ஜேர்மைன கழகத்தில் விளையாடி வந்தார். அக்கழகத்தில் நெய்மாரின் ஒப்பந்த காலம் 2025 ஆம் ஆண்டிலேயே முடிவடையவிருந்தது.

இந்நிலையில் அவரை அல் ஹிலால் கழகத்துக்கு விற்பதற்கு பிஎஸ்ஜி கழகம் இணங்கியுள்ளது. அல் ஹிலால் கழகத்துடன் 2 வருட கால ஒப்பந்தமொன்றில் நெய்மார் கையெழுத்திடவுள்ளார். இதற்காக அவர் மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைய வேண்டும். அல் ஹிலால் கழகத்தில் விளையாடுவதற்காக அவருக்கு வருடாந்தம் 150 மில்லியன் யூரோ ஊதியம் வழங்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

உலகின் முன்னிலை கால்பந்தாட்ட நட்சத்திரங்களில் ஒருவரான போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ இவ்வருட முற்பகுதியில் சவுதி அரேபியாவின் அல் நாசர் கழகத்தில் இணைந்தார். நேமாருடன் பிஎஸ்ஜி கழகத்தில் விளையாடி வந்த ஆர்ஜென்டீன வீரர் லயனல் மெஸ்ஸி, அண்மையில் அமெரிக்காவின் இன்டர் மியாமி கழகத்தில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து வனிந்து ஹசரங்க ஓய்வு



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதற்கு இலங்கைக் கிரிக்கெட் வீரர் வனிந்து ஹசரங்க தீர்மானித்துள்ளார். ஶ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்துக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் இத்தீர்மானத்தை அவர் அறிவித்துள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் கவனம் செலுத்துவதற்காக இத்தீர்மானத்தை மேற்கொண்டதாக ஹசரங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி தனது 26 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய வனிந்து ஹசரங்க, 2020 முதல் 4 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். இறுதியாக 2021 ஏப்ரலில் நடைபெற்ற பங்களாதேஸுக்கு எதிரான போட்டியே அவர் இறுதியாக விளையாடிய டெஸ்ட் போட்டியாகும்.

2017 முதல் 48 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் 2019 முதல் 58 சர்வதேச இருபது-20 போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார். (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2891

**தர்சன்**

இந்தா நீ கேட்ட நாட்டுக்கோழி.
இத மீன் கொழம்பு வாசம் வர்ற மாதிரி வையி.



கோழிய காணோம்ன்னு தேடிட்டிருக்கின்ற
பக்கத்து வீட்டுக்காரன் சண்டைக்கு வருவான்

**துவாரகா**

சனிக்கிழமை ஆனா பீர் நெனப்பு வருது. ஞாயிற்றுக்கிழமை ஆனா கறி நெனப்பு வருது. திங்கட்கிழமை ஆனா மட்டும் எந்திறிக்கவே நெனப்பு வர மாட்டேங்குது



**ஷாம்**

ஜோதிடர்- வலது கையில் இருக்கும் இந்த மச்சத்தால் உங்களுக்கு நல்ல மனைவி அமையும்.



வந்தவர்- அடேய் அது சூடு வச்ச தழும்பு.
அதை வச்சதே என் மனைவி தான்.

**கீதா**

குழந்தையை அம்மா நீண்டநேரம்
திட்டிக் கொண்டிருந்தால்



அது குழந்தையை அல்ல என
புரிந்து கொள்பவனே புத்திசாலிக் கணவன்.

**வைசாலி**

பெண்களிடம் காதலை சொல்லும் போது புடிக்கலைன்னா செருப்பால அடிப்பாங்க.



புடிச்சிருந்தா கல்யாணம் பண்ணிக்கிட்டு
பூரிக்கட்டையால அடிப்பாங்க.

**சமந்தா**

குழந்தை-அம்மா ஏன் காந்தி
தாத்தாவிற்கு முடியே இல்லை.
அம்மா- உண்மை பேசுறவங்களுக்கு
முடியே இருக்காது.



குழந்தை -ஓ அதான் பொண்ணுங்களுக்கு
எல்லாம் நீளமான முடி இருக்குதோ.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

பேராசிரியர்.கா.கைலாசநாதக்குருக்கள்
நினைவுப்பேருரை -2023

பேருரைத் தலைப்பு :
**"சித்தர் பரிபாஷைகள் ~அறிவியல் நோக்கிலான கட்டவிழ்ப்பு முயற்சி"**

பேருரை வழங்குநர் :
**கலாநிதி.ச.முகுந்தன்,**
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத் துறை,
இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திகதி :** 16.08.2023 (புதன்கிழமை)
பி.ப 3.00 மணி

**நிகழ்விடம்** :கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(சி-7073)

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## விகாரை நிர்மாணப் பணிகளை தடுத்து நிறுத்திய கிழக்கு ஆளுநர்

(திருமலை)

திருகோணமலை - நிலாவெளி பகுதியிலுள்ள பெரியகுளம் பொரலுகந்த ரஜமகா விகாரையின் நிர்மாண பணிகளை ஆரம்பிப்பதை தவிர்க்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.பௌத்த விகாரையொன்று நிர்மாணிக்கப்படுவதற்கு தடை விதிக்கும் வகையில் ஆளுநர் ஒருவர் செயற்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவென தெரிவிக்கப்படுகின்றது.இதற்கமைய பொரலுகந்த ரஜமகா விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சீலவங்கதிஸ்ஸவிற்கு. பிரதேச செயலாளர் ஊடாக செந்தில் தொண்டமான் அறிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட மக்கள். சிவில் அமைப்புகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் ஆகியோரின் கோரிக்கைக்கு அமையவே. இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.பொரலுகந்த ரஜமகா விகாரையின் அபிவிருத்தி பணிகள் தொடர்பில். விகாரையை அண்மித்துள்ள மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக ஆர்.சம்பந்தன் ஆளுநருக்கு அறிவித்துள்ளார். (நி-5)

## பிரதமர் தினேஷ் சீனா விஜயம்

(கொழும்பு)


பிரதமர் தினேஷ் குணவர்தன நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு சீனாவிற்கு சென்றுள்ளார்.

7 ஆவது சீனா-தெற்காசியா எக்ஸ்போ, 27 ஆவது சீனா குன்மிங் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி ஆகியவற்றில் அவர் தலைமை விருந்தினராக கலந்து கொள்கிறார். (நி-5)

# மரண அறிவித்தல்

*பிறப்பு-10.12.1936*
*இறப்பு-15.08.2023*

அமரர்.
**கந்தையா சாம்பமூர்த்தி**
(இளைப்பாறிய ஆங்கில.உடற்கல்வி ஆசிரியர் - புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி)



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கு சிவன்கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சாம்பமூர்த்தி அவர்கள் 15.08 2023 செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (மலாயன் பென்சனியர் - தெல்லிப்பளை) இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும்,

காலஞ்சென்ற க.சி.பெரியதம்பி பாக்கியம் (புத்தூர்) தம்பதியினரின் மருமகனும் சிவஞானதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குமரேசன், மோகன குமார் மற்றும் சாந்தகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கார்த்திகாவின் அன்பு மாமனாரும் ஸ்வாதி, ஸர்விகா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான நடராஜா (மலேசியா), தியாகராஜா, சரஸ்வதி, மகேஸ்வரி மற்றும் கணேசமூர்த்தி (இலங்கை வங்கி முகாமையாளர்),

மதனகாமேஸ்வரி (தெல்லிப்பளை), ஈஸ்வரி (இளைப்பாறிய RMP), சுந்தரமூர்த்தி ( சுவிஸ் ) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர்களான மாணிக்கவாசகர்(கிராம அலுவலர்), கலாரூபன் மற்றும் சிவனேசதேவி(அவுஸ்திரேலியா), விக்னேஸ்வரன் (கனடா), திருஞானசம்பந்தர் (புத்தூர்), குகானந்ததேவி (புத்தூர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.08.2023 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புத்தூர் மேற்கு கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி -7071)

சிவன்கோவிலடி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

தகவல்- குடும்பத்தினர்.

## சிகிரியாவை பார்வையிட வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் அதிகரித்த் கட்டணம் அறவீடு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த சில மாதங்களாக பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையின் சுற்றுலாத் தலங்களில் ஒன்றான சிகிரியாவை பார்வையிடுவதற்காக வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் அதிகளவில் பணம் வசூலிக்கப்படுவதாக சமூக வலைத்தளங்களில் புகைப்படம் வெளியாகியுள்ளது.

அதற்கமைய உள்நாட்டு சுற்றுலா பயணிகளிடம் 100 ரூபாவும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் 9810 ரூபாவும் அறவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் அதிகரித்த கட்டணங்கள் அறவிடப்படுகின்றமை தொடர்பில் சுற்றுலாப் பயணிகள் கவலை அடைந்துள்ளனர். (நி-5)

# இராசிபலன்

16.08.2023
ஆடி 31, புதன்கிழமை
அமாவாசை பிற்பகல் 3.33 மணிவரை
ஆயிலியம் மாலை 6.14 மணிவரை

சுபநேரம் -4.35-6.05 மணிவரை
இராகுகாலம்-12.05-1.35 மணிவரை
சந்திராஷ்டமம்-
பூராடம், உத்தராடம்.

செல்வச்சந்நிதி முருகன்
கொடியேற்றம்.

வளவன்

**மேஷம்** அழகுசாதனப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** விரதம் வழிபாடுகளைக் கடைப்பிடிக்கும் எண்ணம் மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்,புதிய முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** குடும்பத்தில் மங்கலமான நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், பொருளாதார நிலையில் வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம்.

**கும்பம்** தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று நடைபெறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மிதுனம்** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், நீங்கள் விரும்பிய நபர் உங்களைத் தேடி வரலாம்.


**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**மீனம்** நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியம் ஒன்று இன்று கைகூடும், பாராட்டும் புகழும் கூடும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.

குற்றவாளிகளுக்குத் தூக்கம் வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்திய துணை தூதரகத்தில் இந்தியாவின் சுதந்திர தின நிகழ்வுகள்





(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கொடியேற்றப்பட்டு கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று காலை 9 மணியளவில் இந்தியாவின் தேசியக் கொடியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெய பாஸ்கரன் ஏற்றி வைத்தார்.

இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தார். இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியா 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி பிரித்தானியாவின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திர மடைந்தமை குறிப்பிடத்தக்கது. (4-33-104)

# வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி கூலிப்படையை ஏவி தாக்குதல்

## கல்வியங்காட்டில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வன்முறை கும்பல் ஒன்று வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதுடன், வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் தீக்கிரையாக்கியுள்ளனர்.

கல்வியங்காடு பூதவராஜர் ஆலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றினுள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 6 பேர் கொண்ட வன்முறை கும்பல் புகுந்து தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வீட்டில் பொருத்தியிருந்த கண்காணிப்பு கமரா பதிவுகளின் அடிப்படையில் தாக்குதலாளிகளை இனம் கண்டுள்ளதாகவும் வெளிநாட்டில் இருந்து தாக்குதலுக்கு பணம் கொடுத்து, கூலிப்படையை ஏவி தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரித்தனர். (4-33)

# பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 18,19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வு காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் ந. பரமேஸ்வரன் தலைமையில் பாடசாலை திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.பல்கலை கல்வியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ம.சத்தியகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலை 9 மணிக்கு கனகசிங்கம் மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் ஆரம்பமாகும்.

இதில் ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் எல். இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வுகள் 3 மணிக்கு பாடசாலை திறந்த வெளியரங்கில் ஆண்டு நிறைவு விழா குழு தலைவர் தி. கிருஸ்ண குமார் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் தேசமான்ய லயன் கலாநிதி செ. திருமாறன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (4-5)

# வடக்கு ஆளுநரை இன்று சந்திக்க முடியாது

(அராலி)

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.ஸ்.ம்.சார்ள்ஸ் இன்று அரச அலுவல்களின் நிமிர்த்தம் வெளியே செல்வதால் ஆளுநர் செயலகத்திற்கு வருகை தரமாட்டார்.எனவே பொதுமக்கள் இன்றையதினம் ஆளுநர் செயலகத்தில் ஆளுநரை சந்திக்க முடியாது என்று ஆளுநரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (4-5-6-104)



பிரான்ஸில் ஆண்டு தோறும் நடைபெறும் பிரெஞ்சுப் பாண் தயாரிக்கும் போட்டியில் வெற்றி பெற்ற இலங்கைத் தமிழரான தர்ஷன் செல்வராஜாவை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

(படம்- [illegible])

# சுத்திகரிக்கப்பட்ட இலவச குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பலாலி பருத்தித்துறை வீதி சந்திக்கருகாமையில் உள்ள சன்மார்க்க சனசமூக நிலைய வளாகத்தில் நிறுவப்பட்டிருக்கும் வடிகட்டிய இலவச குடிநீர் விநியோகம் இன்று புதன்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்.மாவட்ட ஊரும் உறவும் அமைப்பின் தலைவரும் பொருளியல் பேராசானுமாகிய மாணிக்கம்- லோகசிங்கத்தினால் சம்பிர தாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் சமூக ஆர்வலர்களது சுமார் 7 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் நிறுவப்பட்டுள்ள மேற்படி வடிகட்டிய இலவச குடிநீர்த் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் ஊரும் உறவும் அமைப்பின் போஷகர் சிவத்திரு. விபுலா அடிகளார் மற்றும் ஊரும் உறவும் அமைப்பின் செயலாளரும் ஊடகவியலாளருமாகிய இ. கிருபாகர சூரியன், யாழ்ப்பாணம் பிரதேச உறுப்பினர் பொ. தியாகலிங்கம் உட்பட பலர் கலந்து சிறப்பிகவுள்ளனர்.

மேற்படி இலவச குடிநீர் தினசரி பி.பகல் 4 மணிமுதல் 6 மணிவரை பொது மக்களின் நலன்கருதி இடம் பெறும் என யாழ் மாவட்ட ஊரும் உறவும் அமைப்பின் செயலாளர் இ. கிருபாகரசூரியன் தெரிவித்துள்ளார். (4-5)

# வீட்டுத்தோட்டப் போட்டிக்கான இலவச விதைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப்பசுமை இயக்கம் மாணவர்களிடையேவீட்டுத் தோட்டச் செய்கையைஊக்குவிக்கும் முகமாக மாணாக்கஉழவர் என்னும் வீட்டுத் தோட்டப் போட்டியை ஆண்டு தோறும் நடத்தி வருகிறது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, நஞ்சற்ற உணவுற்பத்தி, மாணவர்களை மன அழுத்தங்களில் இருந்துவிடுவித்தல் ஆகியவனவற்றை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இப்போட்டி இந்தஆண்டும் நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்குத்தமிழ்த் தேசியப்பசுமை இயக்கம் தற்போது இலவசமாக விதைப்பொதிகளை வழங்கி வருகின்றது.

இப்போட்டியில் கலந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் யாழ்ப்பாணம்,அரசடி வீதி,கந்தர்மடத்தில் அமைந்துள்ளதமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தையும், விதைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். இன்று, நாளை, நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிமுதல் 4.30 மணி வரைபெற்றோர் சகிதம் வந்து மாணவர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்

போட்டியில் பங்கேற்கும் அனைத்துமாணவர்களுக்கும் மாணாக்கஉழவர் சான்றிதழ்களும் சிறப்பாகவீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்பவர்களுக்குச்சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. (4-5)



யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய தீர்த்தோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.ஆடி அமாவாசை தினமாகிய நேற்று வில்லூன்றி தீர்த்தக் கரையில் பலரும் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.

(படம்- சிவசாந்தன்)

# மாட்டுவண்டி சவாரி போட்டி

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, வடமாகாண ரீதியான தங்கப் பதக்கத்தை பரிசாக கொண்ட மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப்போட்டி ஏற்பாடாகியுள்ளது.

சமூக சேவையில் 10 ஆண்டுகளாக சிறப்புப் பணியாற்றி வரும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் ஏற்பாடாகியுள்ள இம் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியானது, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அராலி புனாவோடை சவாரிவிடந்தையில் நடைபெறவுள்ளது.

A,B,C,D,E என 5 பிரிவுகளை கொண்ட இப்போட்டியில் வடமாகாணத்தின் பல பாகங்களில் இருந்தும் ஏராளமான சவாரிப் போட்டியாளர்கள் கலந்து போட்டி போடவுள்ளனர்.

இவ் 5 பிரிவுகளிலும் முதலிடம் பெறும் காளைச் சோடிகளின் வெற்றியாளர்களுக்கு தங்கப் பதக்கங்கள் பரிசாக வழங்கபடவுள்ளதுடன், ஏனைய 2ஆம்,3ஆம்,4ஆம் இடங்களை பெறும் அனைத்து பிரிவுகளைச் சேர்ந்த வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கபடவுள்ளன. (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டெம்பர் இறுதிவரை வறட்சியான காலநிலை

(கொழும்பு)

**தென்மேற்கு பருவமழையில் எல் நினோவின் தாக்கம் காரணமாக, செப்டெம்பர் இறுதிவரை இலங்கையில் வறட்சியான காலநிலை நீடிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.**

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையின்படி, இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை மே முதல் செப்டெம்பர் வரை, போதுமான மழையை வழங்கத் தவறிவிட்டது. இது சில மாவட்டங்களில் நீடித்த வறட்சிக்கு பங்களித்துள்ளது.

எவ்வாறாயினும், நவம்பரில் எதிர்பார்க்கப்படும் வடகிழக்கு பருவமழை, தற்போதைய வானிலை முறைகளால் பாதிக்கப்படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடகிழக்கு பருவமழை பயிர்களுக்கு, குறிப்பாக நெல் போன்ற பிரதான பயிர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

வடமத்திய மாகாணத்தில் உள்ள விவசாயிகள், வடகிழக்கு பருவமழையின் வருகையை எதிர்பார்த்து செப்டெம்பர் மாதத்திற்குள் நடவு செய்வதை பாரம்பரியமாக தொடங்குகின்றனர்.

இதேவேளை முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைவாகவே உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இறக்குமதி தளர்வு வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

வாகன இறக்குமதி தடை நீக்கம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை நிதி அமைச்சு வெளியிட்டுள்ளது.

பொது போக்குவரத்து பயன்படுத்தப்படும் பேருந்துகள், லொறிகள், பாரவூர்திகள் மற்றும் பவுசர்கள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை தளர்த்தி வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (நி-5)

## சட்டவிரோத மருந்து விற்பனை மதவாச்சியில் ஒருவர் கைது

(கொழும்பு)

மதவாச்சி பகுதியில் சட்டவிரோத மருந்து விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் கடற்படை மற்றும் உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே மதவாச்சி பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மருந்தகத்தில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (நி-5)


## கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ.து)-கிளிநொச்சி
## பதிவு இலக்கம், திகதி :- PA/46 08.02.1971

**அங்கத்தவர்களின் கவனத்திற்கு,**

கிளை பொதுச்சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்கள் பட்டியல்கள் காட்சிப்படுத்தல்.

30.06. 2023ஆம் திகதியுடன் அங்கத்தவர் பட்டியல் முடிவுறுத்தப்பட்டு அத்திகதியில் வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு கிளை நிலையங்களிலும் தலைமை அலுவலகத்திலும் இயங்காத கிளை நிலையங்களின் பட்டியல்கள் கிராம அலுவலர் அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இப்பட்டியலிலுள்ள பெயர் முகவரியில் வேறுபாடுகள் இருப்பின் அல்லது பெயர் தவற விடப்பட்டிருப்பின் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் 28.08.2023ஆம் திகதிக்கு முன் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

01. கணேசபுரம் - கிராம அலுவலர் அலுவலகம், கணேசபுரம்.
02. கனகபுரம் - கிராமியவங்கி, கனகபுரம்.
03. திருநகர் - திருநகர் கோப்சிற்றி விற்பனை நிலையம், திருநகர்.
04. ஜெயந்திநகர் - கிராம அலுவலர் அலுவலகம், ஜெயந்திநகர்.
05. கிளிநொச்சி மேற்கு - கிராம அலுவலர் அலுவலகம், பெரியபரந்தன்.
06. உருத்திரபுரம் மேற்கு - உருத்திரபுரம் மேற்கு கிளை நிலையம், உருத்திரபுரம்.
07. உருத்திரபுரம் கிழக்கு - கிராம அலுவலர் அலுவலகம், உருத்திரபுரம் கிழக்கு.
08. சிவநகர் - உருத்திரபுரம் வடக்கு கிளை நிலையம், உருத்திரபுரம்.
09. புதுமுறிப்பு - கிராம அலுவலர் அலுவலகம், புதுமுறிப்பு.
10. கிளிநொச்சி கிழக்கு - கிராம அலுவலர் அலுவலகம், மருதநகர்.
11. இரணைமடு கிழக்கு - கிராம அலுவலர் அலுவலகம், மருதநகர்.
12. கனகாம்பிகைக்குளம் - கிராம அலுவலர் அலுவலகம், கனகாம்பிகைக்குளம்
13. திருவையாறு - கனகாம்பிகைஅம்மன் கிளை நிலையம், திருவையாறு
14. இரத்தினபுரம் - இரத்தினபுரம் கிளை நிலையம், இரத்தினபுரம்.
15. ஆனந்தபுரம் - ஆனந்தபுரம் கோப்சிற்றி விற்பனை நிலையம், ஆனந்தபுரம்.
16. பாரதிபுரம் - பாரதிபுரம் கிளை நிலையம், பாரதிபுரம்.
17. உதயநகர் - கிராம அலுவலர் அலுவலகம், உதயநகர் மேற்கு.
18. அம்பாள்குளம் - கிராம அலுவலர் அலுவலகம், அம்பாள்குளம்.
19. செல்வாநகர் - செல்வாநகர் கிளை நிலையம். செல்வாநகர்.

**குறிப்பு : அங்கத்தவராக இணைந்து ஒருவருடத்தினை பூர்த்தி செய்த அங்கத்தவர்கள் வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களாகும்.**

செயலாளர்
கரைச்சி தெற்கு பநோ.கூ.சங்கம் (வ.து)
கிளிநொச்சி.


## எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டத்துக்கான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய அனுமதி

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபைக்கும் அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு தனியார் நிறுவனத்துக்கும் இடையே உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு கடந்த 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு நாளொன்றுக்கு 4 இலட்சத்து 20 ஆயிரம் பீப்பாய்கள் கொள்ளளவு கொண்ட பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

இந்தநிலையில், இரு தரப்பினருக்கும் இடையில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகளின்படி, திட்ட ஆதரவாளர் செயற்படவில்லை என்ற காரணத்தினால் இந்த உடன்படிக்கையை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-5)

## டொலரின் பெறுமதியில் திடீர் மாற்றம் மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

(கொழும்பு)

இலங்கை ரூபாவிற்கு நிகரான டொலரின் பெறுமதியில் நேற்று மாற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 314 ரூபா 72 சதம் -விற்பனை பெறுமதி 328 ரூபா 02 சதம்.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 398 ரூபா 28 சதம் -விற்பனை பெறுமதி 417 ரூபா 7 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 342 ரூபா 24 சதம் - விற்பனை பெறுமதி 359 ரூபா 29 சதம் .

கனடா டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 232 ரூபா 39 சதம் - விற்பனை பெறுமதி 245 ரூபா 9 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 202 ரூபா 83 சதம் - விற்பனை பெறுமதி 214 ரூபா 56 சதம். சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 230 ரூபா 67 சதம் - விற்பனை பெறுமதி 243 ரூபா 8 சதம் என பதிவாகியுள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 400 | 450 |
| தக்காளி | 250 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 250 | 200 | 300 |
| கோவா | 250 | 260 | 280 | 300 |
| கரட் | 350 | 500 | 550 | 550 |
| பூசணி | 120 | 120 | 120 | 120 |
| புடோல் | 100 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 160 | 160 |
| பாகற்காய் | 450 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 140 | 140 | 100 | 320 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 160 | 240 |
| பயற்றங்காய் | 500 | 1000 | 500 | 500 |
| லீக்ஸ் | 260 | 200 | 250 | 250 |
| பீற்றூட் | 120 | 160 | 160 | 160 |
| கறிமிளகாய் | 300 | 400 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 200 | 240 |
| போஞ்சி | 450 | 600 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | 200 | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 70 | 100 | 150 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 280 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 100 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம்

180

### யாரிடம் எப்போது எப்படிப் பேச வேண்டும் என்று தெரிந்திருப்பவர்களே வெற்றியடைகிறார்கள்



மன்னருக்கு மீன் கொண்டு வந்தான் ஒரு மீனவன் "அரிதான இந்த மீனை தாங்கள் வாங்குவது தான் பொருத்தமாக இருக்கும்" என்றான்.

மன்னரும் மகிழ்ந்து அவனுக்கு ஐந்தாயிரம் பொற்காசுகள் கொடுத்தார்.

மகாராணி கொதித்து விட்டார். "ஒரு அற்ப மீனுக்கு இவ்வளவு பணமா?" அதை திரும்ப வாங்குங்கள் என்றாள். "முடிந்த வியாபாரத்தை மாற்றுவது அழகல்ல" என்று மன்னர் மறுத்தார்.

"சரி அவனை கூப்பிட்டு இந்த மீன் ஆணா பெண்ணா என்று கேளுங்கள்.

ஆண் மீன் என்று அவன் சொன்னால் பெண் மீன் தான் வேண்டும் என்றும் பெண் மீன் என்று சொன்னால் ஆண் மீன் தான் வேண்டும் என்றும் கேளுங்கள்.

எப்படியும் அவனிடமிருந்து பொற்காசுகளை பிடுங்கி ஆக வேண்டும்" என்றாள் மகாராணி.

மீனவன் திருப்பி அழைக்கப்பட்டான். கேள்விக் கணையை மகாராணி தொடுத்தாள். அவன் உஷாராக பதில் சொன்னான் "இது ஆணுமில்லை பெண்ணுமில்லை" இரண்டின் குணங்களையும் கொண்ட அதிசய மீன்.

அதனால் தான் அதை மன்னருக்குக் கொண்டு வந்தேன் என்றான்.

இந்த பதிலால் நெகிழ்ந்த மன்னர் மேலும் ஐந்தாயிரம் பொற்காசுகளைக் கொடுத்தார். அதிலிருந்து ஒரு காசு தரையில் விழுந்து ஓடியது. மீனவன் அதை தேடி எடுத்தான். மகாராணி கோபத்தின் உச்சிக்கே போனாள்.

"பேராசைக்காரன்! கீழே விழுந்த காசை யாராவது வேலைக்காரர்கள் எடுத்துப் போகட்டுமே என்று விட்டானா பாருங்கள்" என்றாள் மன்னரிடம்.

அவன் நிதானமாக திரும்பிச் சொன்னான். "நான் பேராசையில் அதை எடுக்கவில்லை மகாராணி. அந்த நாணயத்தில் மன்னரின் உருவம் இருக்கிறது. யாராவது தெரியாமல் அதை மிதித்தால் கூட என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது."


இதனால் இன்னும் நெகிழ்ந்த மன்னர் மேலும் ஐந்தாயிரம் பொற்காசுகளைக் கொடுத்தார். இப்பொழுது மகாராணி தனது வாயை மூடிக் கொண்டாள்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

இந்தியாவின் சுதந்திர தினத்தன்

# டில்லி செங்கோட்

# தேசியக் கொடி ஏற்றினார் பி



(டில்லி)

**இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தின விழா டில்லி கொண்டாடப்பட்டது.21 குண்டுகள் முழங்க செங்கே கொடி ஏற்றி வைத்தார் பிரதமர் மோடி.**

அதன் பின் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு பிரதமர் மோடி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்திற்கு சென்று, மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் செங்கோட்டை சென்றார்.

அவரை மத்திய பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங், இணை அமைச்சர், பாதுகாப்பு செயலர் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

பின்னர், முப்படை மற்றும் டில்லி பொலிஸாரின் அணி வணக்கத்தை பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து டைகளின் சிறப்பு அணி மரியாதையை ஏற்றுக் டார்.

அதனைத் தொடர்ந்து

## நைஜீரிய ஆயுதக்குழுவின் தாக்குதலில் 26 பாதுகாப்புப் படையினர் பலி

(அபுஜா)

நைஜீரியாவில் ஆயுதக்குழுவொன்று நடத்திய திடீர் தாக்குதலில் அந்நாட்டின் பாதுகாப்புப் படையினர் 26 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

நைஜீரியாவின் மத்திய பிராந்தியத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் காயமடைந்த படையினரை மீட்பதற்காக சென்ற இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று நேற்று முன்தினம் வீழ்ந்துள்ளது.

உயிரிழந்த 11 படையினரையும் காயமடைந்த 7 படையினரையும் ஏற்றிச்சென்ற நிலையில் இந்த ஹெலி கொப்டர் வீழ்ந்ததாக தன்னை அடையாளம் காட்ட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எம்ஐ171 ரக ஹெலிகொப்டர் ஒன்றே வீழ்ந்துள்ளது என நைஜீரிய விமானப்படை பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார். (ரி-5)

## எத்தியோப்பியாவில் வான்வழித் தாக்குதல் 26 பேர் உயிரிழப்பு



(அடிஸ் அபாபா)

எத்தியோப்பியாவில் நடைபெற்ற வான்வழி தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர்.

எத்தியோப்பியாவின் அம்ஹாரா பகுதியில் நடைபெற்ற வான்வழி தாக்குதலில் சுமார் 26 பேர் கொல்லப் பட்டதாக மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எத்தியோப்பியாவில் ராணுவம் மற்றும் உள்ளூர் போராளிகளுக்கு இடையி லான மோதல் காரணமாக இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. இது டிரோன் தாக்குதல் என்று குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.


மனித உரிமைகள் ஆணையம், மனித உரிமைச் சட்டங்களை மீறுவதாகக் கூறப்படும் அனைத்து மோதல் சம்பவங்களையும் உடனடியாக முடிவுக்குக்கொண்டுவர வேண்டும்என கேட்டுக் கொண்டுள்ளது. (ரி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தன்று

# ாட்டையில்

## ர் பிரதமர் மோடி



ா டில்லியில் கோலாகலமாக
செங்கோட்டையில் தேசியக்

தை பிரதமர் மோடி
ண்டார்.
த் தொடர்ந்து முப்ப
சிறப்பு அணிவகுப்பு
யை ஏற்றுக் கொண்

த் தொடர்ந்து பிரதமர் மோடி தேசியக் கொடி ஏற்றினார்.

21 குண்டுகள் முழங்க தேசிய வணக்கம் செலுத்தினார். தேசியக் கொடிக்கு உலங்கு வானூர்தி முலம் மலர் தூவப்பட்டது. (நி-5)

# ரஷ்யாவில் வெடி விபத்து 12 பேர் உயிரிழப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவின் காகசஸ் குடியரசின் தாகெஸ்தானில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடி விபத்தில் 12 பேர் உயிரிழந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.


மேலும், 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய நாளிதழான இஸ்வெஸ்டியாவின் டெலிகிரா மில் மேற்கோள் காட்டப்பட்ட ஒரு சாட்சியின்படி, கார்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதியில் தீப்பிடித்து பெற்றோல் நிலையத்திற்கு பரவியதாக கூறப்பட்டுள்ளது.

மேலும், ரியா நோவோ ஸ்டி செய்தி நிறுவனத்தால் டெலிகிராமில் வெளியிடப்பட்ட வீடியோ ஒன்றில், ஒரு கட்டடத்தில் இருந்து தீப்பிழம்புகள் எழுவதைக் காட்டியது.

அதைத் தொடர்ந்து ஒரு பெரிய வெடி விபத்து ஏற்பட்டு சுமார் 600 சதுர மீற்றர் (6,450 சதுர அடி) பரப்பளவில் தீ பரவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# ரஷ்ய எல்லையில் பறந்த நோர்வே விமானம் விரட்டியடிப்பு



(மொஸ்கோ)

நோர்வே நாட்டு இராணுவ ரோந்து விமானம் ஒன்று பாரன்ட்ஸ் கடல் மீது பறந்து ரஷ்ய எல்லையில் நுழைய முயன்றதாகவும் அதனை ரஷ்ய விமானப்படையின் மிக் 29 போர் விமானம் விரட்டியடித்ததாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில்,

ரஷ்யாவின் போர் விமானம் எதிர்கொண்டதையடுத்து நோர்வே விமானம் வந்த வழியே திரும்பிச் சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் விமானம் போசெய்டன் ரோந்து விமானம் என்று அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

நேட்டோ உறுப்பு நாட்டுக்கும் ரஷ்யாவுக்குமான இராணுவ ரீதியான மோதல் ஏற்பட்டால் அது மிகப்பெரிய யுத்தத்திற்கான தொடக்கமாக இருக்கும் என கூறப்படுகின்றது. (நி-5)

# லில் பலி

றிச் சென்ற
ஹலி கொப்
னை அடை
ம்பாத அதி
வித்துள்ளார்.
றலிகொப்டர்
ள்ளது என
படை பேச்சா
ள்ளார். (நி-5)

# குதல்



க் கூறப்படும்
சம்பவங்
யாக முடிவு
வண்டும்என
ள்ளது. (நி-5)

# சீனாவில் சுழன்றடிக்கும் மழை நிலச்சரிவால் 22 பேர் பலி



(பீஜிங்)

சீனாவில் கடந்த ஒரு வா ரத்துக்கும் மேலாக தொடர்ந்து கடும் மழை பெய்து வருகிறது.

இதனால் பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. வீதிகள், பாலங்கள், வீடுகள் என்பன சேதம் அடைந்துள்ளன.

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கி இருக்கிறது. வெள்ளத்தில் சிக்கிய ஆயிரக் கணக்கான பொது மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் ஜியாங் மாவட்டம் ஹாஸ் என்ற பகுதியில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதில் வீடுகள் இடிந்து பலர் உயிரோடு மண்ணுக்குள் புதைந்துள்ளனர். மீட்புப் படை யினர் விரைந்து சென்று இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலச்சரிவில் சிக்கி உயிர் இழந்த 22 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. பலர் இடிபாடுகளுக்குள் சிக்கி இருக்கலாம் என தெரிவித்துள்ள நிலையில் அவர்களை தேடும் பணியினை மீட்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல நகரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் இருளில் மூழ்கி உள்ளதோடு, ஆயிரக்கணக் கான பொது மக்கள் வீடு களை இழந்துள்ளனர். (நி-5)

# மியன்மாரில் மண்சரிவு சுமார் 30 பேர் மாயம்



(நைப்பியிதோ)

மியன்மாரில் சுரங்கமொன்றில் ஏற்பட்ட மண்சரிவினால் குறைந்தபட்சம் 30 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்சரிவு மியன்மாரின் வடபகுதி கச்சின் மாநிலத்திலுள்ள, ஜேட் எனும் பச்சைக்கல் சுரங்கமொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

ஏரியொன்றுக்கு அடித்துச் செல்லப்பட்டவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை மீட்புக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை மியன்மாரில் இதே பகுதியில் 2020 ஆம் ஆண்டு மண்சரிவினால் 162 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வறுமையைப் போக்கும் வள்ளி (கிழங்கு) களும் பூசணிக் குடும்ப பயிர்களும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஊனின்றி அனுதினம் உணவின்றி உயிர்கள் அல்லாடும் நிலைமைக்குள் நம் நாடு வந்திருப்பது யாரும் எதிர்பார்த்திராத காலத்தின் கோலமாகும். ச்ரியாக திட்டமிட்டு மக்களின் எதிர்காலத்தை மையப்படுத்தியிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது என்பதனை திரும்ப திரும்ப உரைத்து என்ன பலன். இத் தேசத்தில் வறுமையின் பிடிக்குள் சிக்கி சின்னாபின்னமாகும் குடும்பங்கள் கணக்கிலடங்காதவை. அவர்களின் ஆகக் குறைந்தது ஒரு நாளுக்கான குடும்ப செலவுக்கான பணம் அன்றாடம் செய்யும் தொழில் மூலம் கிடைக்காது குழந்தைகளையும் வயதானவர்களையும் நோய்வாய்ப்பட்டவர்களையும் கொண்டுள்ள குடும்பங்கள் அவதிப்படுகின்ற நிலைமை பாரீர். சுய உற்பத்தி குடும்ப பொருளாதாரத்திற்குள் [Self-farming family economy] இவ்வாறான வறுமையில் வாடும் மக்களை உள்ளீர்ப்பதற்கான திட்டங்கள் பலவுண்டு. அவற்றுள் முதன்மையான குடும்ப விவசாயம் [Family farming] என்னும் ஒரு தசாப்தத்திற்கான விழிப்புணர்வு ஏற்கெனவே நடைமுறையிலிருந்தாலும் இன்னும் அதனுள் பல குடும்பங்கள் இணைக்கப்படவில்லை.

தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினையே அழித்திடுவோம். என அன்றே அறை கூவிய பாரதிக்கும் இங்கே தனியொருவனுக்கு உணவில்லையென்றாலும் மின்சாரத்தை உருவாக்கிடுவோம் என்னும் சிந்தனை உள்ளவர்களுக்கும் எத்துணை வேறுபாடு. நீர்வளத்தை தவிர்த்து மீள் சுழற்சி சக்தி (Renewable energy) மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வழிகள் பலவிருந்தும் ஆங்காங்கே சூரிய சக்தியினாலும் காற்றாலைகளினாலும் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களை நிறுவினாலும் அணுஉலைகளின் மூலம் பெறப்படும் மின்சாரம் இருந்தும் இந்நாடும் இம் மனிதர்களும் ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து இறுதியில் உணவுற்பத்தியில் ஈடுபடும் உழவர் பெருமக்களின் வயிற்றிலடிக்க முயல்வதைத் தவிர எதை உருப்படியாக செய்துவிட்டார்கள். நம் விவசாயிகளை வயற்காட்டில் தானுண்டு தன் வேலையுண்டு என வேலை செய்யவிடுவதற்குப் பதிலாக கொடிபிடித்து கொந்தளித்து வீதியிலிறக்கி நியாயம் கேட்க வைத்ததன் நோக்கம் என்ன? கொவிட் 19 காலப் பகுதியில் ஒவ்வொருவரின் வீடு தேடி உணவு வந்திராவிடில் அனைவருக்கும் தற்போதய விபரீதமான முடிவுகளும் தமது சமூகம் சார்ந்திராத நிலைமையும் ஓரளவாவது புரிந்திருக்கும். இப்படியே கற்றுக் கொண்ட பாடங்களை அவ்வப்போது மறந்து போவதால் அதற்கும் மதிப்பில்லாமல் போய்விட்டது.

குடும்ப தலைவரின் வருமானத்தின் மூலம் அன்றாடம் அவரவர் குடும்பத்தின் செலவுகளை ஈடுகட்ட முடியாமல் அங்கலாய்க்கும் நிலையில் தற்போது பல குடும்பங்கள் குறிப்பாக குழந்தைகள், பெண்கள், வயது முதிர்ந்தவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய அனைவரும் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றார்கள் என்னும் கசப்பான உண்மையை அனைவரும் உணர வேண்டும். இதுவே பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள் [Women-headed families] என்றால் இன்னும் பல மடங்குகளாக பிரச்சினை உருவெடுத்துள்ளது. ஒரு குடும்பத்திற்கான ஒரு நாளுக்கான உணவு முழுமையாக கிடைக்காமல் பிள்ளைகள் கர்ப்பிணிப் பெண்கள் உள்ளடங்கலாக பட்டினியுடன் நாட்களைக் கழிக்கும் நிலைதோன்றத் தொடங்கி விட்டது. ஊட்டச்சத்து குறைபாடு [Malnutrition] இன்னும் அதிகரிக்கும் நிலை தோன்ற வாய்ப்புண்டு. இது நிச்சயமாக தேகாரோக்கியமான சமூகத்தை நாம் எதிர்பார்க்கும் எதிர்கால சந்ததியை உருவாக்க வாய்ப்பளிக்காது.

பூசணி குடும்பபயிர்களில் கரடினொயிட்டுக்கள், ரேர்பீனோயிட்டுக்கள், சப்போனின்கள், மற்றும் தாவர வேதியியல் பொருட்கள் அதிகளவில் உண்டு. குடும்ப உறுப்பினர்களுக்கான உணவினை குறிப்பாக காபோவைதரேற்று (75-97%வரை), தேவையான புரதம் (0.23-0.5%) மற்றும் நார்ச்சத்து என ஓரளவுக்கு அனைத்தையும் கிடைக்கச் செய்வதற்கான பூசணி குடும்பத்து பயிர்களை ஏனைய பயிர்களுடன் நாட்டி அவற்றிலிருந்து வயிற்றுப் பசியைபோக்குவதற்கு வழி செய்யலாம். பூசணிகுடும்ப பயிர்களையும் கிழங்கு பயிர்களையும் வளர்ப்பதற்கு அதிகம் சிரமப்படத் தேவையில்லை. எமது வரண்ட தேசத்திற்கான பயிர்களாக இவை இருப்பதனால் குறைந்த கவனிப்போடு தேவை யான காய்கறிகளை உணவைப் பெற முடியும். மக்களை அவரவர் வீடுகளில் இருக்கின்ற இடவசதி மற்றும் நீர்வசதியைப் பொறுத்து இலகுவில் அதிகளவில் உள்ளீடுகள் தேவைப்படாத கிழங்குப் பயிர்கள் மற்றும் பூசணிக் குடும்ப்பயிர்களை பயிர் செய்ய உதவலாம்.

வள்ளிக் கிழங்குப் பயிர்களில் மரவள்ளி, மோதகவள்ளி, இராசவள்ளி, சக்கரைவள்ளி அல்லது சீனி வள்ளி, இவற்றுடன் கரணை, சட்டிக்கரணை, உருளைக்கிழங்கு,போன்றன எமக்காக இருக்கின்றன. நாம் அன்றாடம் ஒரு குறிப்பிட்ட பயிர்களைத் தான் உண்டு பழகியதால் ஏனையவற்றை உண்பதற்கு மனம் இடங்கொடுக்கவில்லை என்னும் காரணத்தை திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருக்க முடியாது. கிடைக்கின்ற ஊட்டச்சத்தான உணவினை சுத்தமானதாக உண்ணப் பழக்கிக் கொள்ளல் வேண்டும். தயாரிப்பு முறைகளை மாற்றி அவற்றையே சுவையான உணவாக உற்பத்தி செய்யலாம். மக்களின் மனமாற்றம் இவ்விடயத்தில் அவசியம் கவனிக்கப்படல் வேண்டும். தேவைவரும் போது மனமாற்றமும் பூசணிக் குடும்பத்தை (Cucurbitaceae) ஆங்கிலத்தில் Goard குடும்பம் எனவும் கூறுவார்கள். இவை யாவும் இயற்கை எனும் கடவுள் தந்த ஒரு குடும்பத்துப் பயிர்கள் எனவும் கருதலாம். இக் குடும்ப பயிர்களில் பூசணி (Pumpkin), டுபாய் பூசணி (Dubai pumpkin), தார்ப்பூசணி, நீத்துப் பூசணி (Ash gourd),புடோல் (Snake gourd) ,பாகல் (Bitter gourd), கெக்கரி( Cucumber), வெள்ளரி (White gourd), பீர்க்கு (Ridge/Spongegourd), வத்தகை (pointed gourd), சுரைக்காய் (Bottle gourd), இவற்றை விடஆங்கிலத்தில் பலவகையுண்டு. தமிழ்ப் பெயர்கள் பயன்பாட்டிலில்லாத Apple gourd, Spine Gourd, Ivy gourd, Baby gourd, Hairy gourd மற்றும் Bushel gourd இன்னும் இன்னோரன்ன பூசணி குடும்ப பயிர் வகைகள் வித்தியாசமான சுவைகளுடன் ஊட்டச்சத்துக்களுடன் எமக்கான உணவுக்காக உண்டு.

அதிகளவில் எமக்குத்தேவையான ஊட்டச்சத்துக்களை செலவு குறைவாகவும் இலகுவில் சமிபாடடையக் கூடியவாறு இத்தகைய பயிர்கள் கொண்டிருப்பது இயற்கையன்னை எமக்கு தந்த கொடையாகும். இவற்றைத் தவிர்த்து நாம் செயற்கையாக உருவாக்கப்பட்ட விரைவுணவுகளில் அதிக அக்கறை காட்டி உண்டு எமக்கான தேகாரோக்கியத்தையும் இழந்து விடுகின்றோம். பர்கர் பீட்சா என்பன எம்மவர்கள் அதிகம் நாட்டங் கொண்டதால் அதை விட வெளிநாடுகளிலிருந்து வந்து போன சொந்தங்கள் பழக்கிவிட்டுப் போனதால் அதனையும் அதிகவிலை கொடுத்து வாங்கியுண்டு நோயாளிகளாக்கி விட்டுள்ளனர்.

பிள்ளைகளுக்கு உணவூட்டும் அம்மாக்களுக்கு தயவான வேண்டுகோள். விதைக்காக கொண்டு வரப்பட்ட உருளைக் கிழங்கை விற்பனை செய்கின்றவர்களிடம் அதனை வாங்கி அவித்து மசித்து உங்கள் மழலைகளுக்கு உணவாக கொடுக்காதீர்கள். அதிகளவில் பங்கசுநாசினி மற்றும் பூச்சிநாசினிகளால் தோய்த்து எடுக்கப்பட்ட இவை விதைக்காக மட்டுமேயன்றி உணவுக்காக பயன்படுத்தக் கூடாது. ஏனைய தொற்று ஏற்படும் நுண்ணங்கிகளிலிருந்து பாதுகாக்க இம்மாதிரியான விதை உருளைக் கிழங்கில் அதிகளவு அசேதன இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இவற்றை உண்ணும் பிள்ளைகளுக்கு அஜீரணக் கோளாறுகள் ஏற்படுவதுடன் வேறு பல நோய்களும் உருவாக வாய்ப்புக்களை நீங்களாகவே ஏற்படுத்திவிடாதீர்கள்.

இதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் விவசாயிகளின்பால் கரிசனை கொண்டவர்களும் அவர்களுக்கான உள்ளீடுகளை பெறுவதற்கும் குறிப்பாக மேற் குறிப்பிட்ட பயிர்களை உற்பத்தி செய்வதற்கான விதைகள் மற்றும் தண்டுத் துண்டங்களை பெறுவதற்கோ அல்லது பெற்று அவர்களுக்கு வழங்குவதற்கோ உதவலாம். உற்பத்தி செய்தவற்றில் மேலதிகமானவற்றை உள்ளூர் நிர்வாக கட்டமைப்பை உருவாக்கி விற்பனை செய்வதற்கும் வழிசெய்யலாம். விவசாய நிறுவனங்கள் தனியார் தொண்டு நிறுவனங்கள் இது விடயத்தில் தனியான மற்றும் இணைந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். தற்காலிகமான செயற்பாடாக இத் திட்டங்கள் அமைவதும் பின்னர் அதனை கவனியாது முறையாக கணக்கெடுக்காது விடுவதும் இவ்வாறான திட்டங்களின் செயற்படுத்தல்களில் இதுகாலும் நாம் அவதானித்த பலவீனங்களாகும்.


பல இடங்களில் சந்தைப் படுத்தல் சிறியளவிலாயினும் பெரியளவாயினும் செய்வதற்கு பொறிமுறைகள் இருந்தும் அவை இப்போது மீண்டும் நடைமுறையிலில்லை. கொவிட் 19 காலப்பகுதியில் கிராமம் கிராமமாக குறிப்பிட்ட பாதைக்கென சந்தைப்படுத்தல் அலகுகளும் இன்னும் சீமெந்தினால் கட்டப்பட்ட சந்தைகளின் கதவுகள் மூடப்பட்டபோது மூலைக்கொரு கோவில்களின் வீதிகளில் அனைத்து விவசாயப் பொருட்களும் விற்கப்பட்டதனைநாம் அவ்வளவு இலகுவில் மறந்து விடமுடியாது. அந்நேரம் இருந்த இடர் காலத்துக்காக தேவை கருதி உருவான இவ்வாறான உள்ளூர் சந்தைக் கட்டமைப்பே மேலும் விஸ்தீரணம் செய்ய வழி செய்யலாம். குடும்பங்களில் மேலதிகமாக உற்பத்தியாகும் காய்கறிகளை, கனிகளை விற்பனை செய்வதற்கான எளிய பொறிமுறைகளை உருவாக்கினால் அந்த குடும்பங்களுக்கு வருமானமும் வந்து சேரும். இவையாவும் செயலளவில் நடைமுறைப்படுத்துவது யார்? எப்படி? என்னும் வினாக்களை அந்தந்த கிராம சமூகங்களுக்கே விட்டுவிடுவோம். தமக்கான வசதி வாய்ப்பை பொறிமுறையை கொவிட் கற்றுத் தந்த பாடங்களை அடிப்படையாக வைத்து அவர்கள் கண்டறிந்து செயற்படுத்துவார்கள் என்னும் நம்பிக்கை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமான குடிநீருக்காக 35 வருடங்கள் போராடும் கண்ணகிநகர் மக்கள்!

(தருமபுரம்)

**கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கண்ணகிநகர்ப் பகுதியில் உள்ள கிராமத்தில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் 35 வருடங்களாக சுத்தமான குடிநீரைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.**



இதன் காரணமாக நோயாளிகளும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் வரும் அரசியல்வாதிகள் உங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதி அளித்துவிட்டு போய் மறு தேர்தல் வரும்போது தான் அவர்களை காணக் கூடியதாக உள்ளது.

இவர்களாலும் எமக்கான சுத்தமான குடிநீரை பெற்றுத்தர முடியாது உள்ளதாகவும் இதன் காரணமாக சிறுவர்களின் பாடசாலைச் சீருடைகளை கூட கழுவ முடியாது பல மைல் தூரம் சென்று சுத்தமான நீரைப் பெற்று வரும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது ஒரு தீர்வை பெற்றுத் தர வேண்டும் என தெரிவித்துள்ளனர். (4-5-6-316)



கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.
(படம்-தேவானந்தன்)

## வட்டுவாகல் பாலத்தில் வீதி சமிக்ஞை இன்மையால் பயணிகள் அவதி

(முல்லைத்தீவு)

பரந்தன் -முல்லைத்தீவு செல்லும் வீதியில் வட்டுவாகலில் அமைந்துள்ள பாலத்தில் வீதி சமிக்ஞை இல்லாததனால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். குறித்த வீதியில் அமைந்துள்ள பாலத்தில் போக்குவரத்தில் பெரிய வாகனம் ஒன்றே பயணம் செய்ய முடியும். ஏனைய வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு குறித்த வாகனம் வீதியை கடந்ததன் பிற்பாடே பயணம் செய்ய முடியும்.

அவ்வாறு வாகனம் வருவதனை அவதானிக்காது சென்றால் மீண்டும் ஒரு வாகனம் பின்னோக்கி சென்றதன் பின்னரே பயணிக்க முடியும். இவ்வாறாகவே குறித்த பாலத்தில் பயணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையுள்ளது. ஆகவே இப்பாலத்தில் வீதியின் இரு பக்கங்களிலும் சமிக்ஞை விளக்குகள் அமைக்காததனால் வாகன சாரதிகள் பெரும் இடர்களை எதிர்கொள்வதாகவும் குறித்த பாலத்தின் இரு பகுதிகளிலும் வீதி சமிக்ஞைகளை அமைத்து தருமாறும் கோரியுள்ளனர். குறித்த பாலமானது இதுவரை எந்தவித புனரமைப்புக்களுமின்றி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-6-299)

## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ஏற்பாடுகள் தீவிரம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்களுக்கு மஹோற்சவ திருவிழாக்கள் இடம் பெறவுள்ளன.

இந்நிலையில் ஆலயத்தை சூழவுள்ள பகுதிகளில் திருவிழாக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆலய சூழலில்பக்தர்கள் இளைப்பாறுவதற்கான கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தாக சாந்தி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலய வீதியை சுற்றி சிவப்பு வெள்ளை கொடிகள் ஆலயத்தினரால் கட்டப்பட்டு வருகின்றன. கொடிகள் கட்டப்பட்டு எல்லைப்படுத்தப்படும் ஆலய சூழலில் வியாபார நடவடிக்கைகள், யாசகம் பெறல், விளம்பர நடவடிக்கைகள் என்பவை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், ஆலயத்திற்கு வருவோர் அப்பிரதேசத்திற்குள் காலணிகளுடன் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.(4-5-6-33)



ஆடி அமாவாசை தினமான நேற்று கீரிமலை கடற்கரையில் பலரும் விரதம் இருந்து தமது தந்தைக்கு பிதிர் கடன்களை நிறைவேற்றினர்.

(படம்: சிவசாந்தன்)

# பரு.வைத்தியசாலையில் தண்ணீர் பம்பி பழுது

## குடிநீர் இன்றி நோயாளிகள் அவதி

(யாழ்ப்பாணம்)

ஆதார வைத்தியசாலையில் தண்ணீர் வசதி இன்றி நோயாளர்கள் மற்றும் மருத்துவமனை அதிகாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது, தமது வைத்தியசாலைக்கு நீர் வழங்கும் பிரதான நீர்ப் பம்பி செயலிழந்துள்ளமையினால் நேற்று முன்தினம் முதல் தண்ணீர் வசதி இன்றியுள்ளதாகவும் ஆனால் சிறிய ரக தண்ணீர் பம்பிமூலம் பகுதி பகுதியாக நீர் வசதி செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் அதனை சீர் செய்வதற்கு புதிய தண்ணீர் பம்பி கொள்வனவு செய்வதற்கு பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையின் அனுமதியை பெற்று மீள மைக்க காலதாமதமாகலாம் என்றும் யாராவது 7.5 குதிரை வலு கொண்ட நீர்ப்பம்பி ஒன்றினை யாராவது கொடையளித்தால் தண்ணீர் பிரச்சினை உடனடியாக தீர்க்கப்படலாம் என்றும் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் மலசலகூட பயன்பாடு உட்பட குடிநீர் வசதிகளை பெற்றுக்கொள்ள முடியாமல் நோயாளர்கள் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர்.

குறித்த வைத்தியசாலையின் குடிநீர் வசதிக்காக சுத்திகரிக்கப்பட்டு வடிகட்டப்பட்ட குடிநீர் வசதியை சந்நிதியான் ஆச்சிரம் செய்து கொடுத்திருந்தது.

அதனையே நோயாளர்கள் குடிநீருக்காக நம்பியிருந்தனர். ஆனால் அதில் கூட இன்று குடிநீரை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் சபையின் நீர் விநியோகமும் நிறுத்தப்பட்டது.

ஒரு லீற்றர் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் ரூ.130 இல் இருந்து 150 வரையும் விற்பனையாகின்றது.

நோயாளர்கள் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை கடைகளில் கொள்வனவு செய்து பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-6)

## நல்லூர் சுற்றாடலில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் சுற்றாடலில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு ARV தடுப்பூசி நாளை 9.00 மணிக்கு பிரமணக்கட்டு கோவில் வீதி, 10.30க்கு துர்க்கா மண்டபத்தடி கோவில் வீதி, நாளை மறுதினம் 9.00 மணிக்கு தியாகி திலீபன் நினைவுத்தூபிக்கு அருகில் அல்லது (பகுதியில்)... தீயணைப்புப்பிரிவு யாழ்.மாநகர சபை பருத்தித்துறை வீதி அரசடி, 10.30 மணிக்கு பாரதி சிலைக்கு முன்பாக பருத்தித்துறை வீதி அரசடி ஆகிய இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது. நல்லூர் கோவில் சுற்றாடல் பகுதியில் தெருநாய்கள் பிடிக்கப்பட்டு நாய்கள் காப்பகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனவே பொதுமக்கள் தங்களின் வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்குமாறு யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (4-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 257





அரண்மனைத் தோட்டத்தில் உள்ள லதா மண்டபத்தில் நந்தினியை நான் சந்தித்தேன். பார்த்திபா! கடற்பிரயாணம் செய்வோரின் அனுபவங்களை நீ கேட்டிருக்கிறாய் அல்லவா? சமுத்திரத்தில் சில இடங்களில் அளவில்லாத சக்தியுடனும் வேகத்துடனும் கூடிய நீரோட்டங்கள் இருக்குமாம். அந்த நீரோட்டங்களில் கப்பல்கள் அகப்பட்டுக் கொண்டால் சிறிது நேரத்தில் சுக்குச் சுக்காகப் போய்விடுமாம். நந்தினியின் முன்னிலையில் நான் இருந்த போது, கடல் நீரோட்டத்தில் அகப்பட்டுக் கொண்ட கப்பலின் கதியை அடைந்தேன். என் உடல், உள்ளம், இருதயம் எல்லாம் ஆயிரம் சுக்கல்களாகி விட்டன. என்னுடைய நாவிலே வந்த வார்த்தைகள் எனக்கே வியப்பை அளித்தன! 'ஐயோ! இது என்ன இப்படிப் பேசுகிறோம்?' என்று நெஞ்சில் ஒரு பக்கம் தோன்றிக் கொண்டிருந்தபோது, வாய் ஏதேதோ உளறிக் கொண்டிருந்தது. எனக்கு இளவரசுப் பட்டம் சூட்டியதைப் பற்றி நந்தினி தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள். 'எனக்கு அதில் ஒன்றும் மகிழ்ச்சி இல்லை!' என்றேன்.

'ஏன்?' என்று கேட்டாள்.

'இது என்ன கேள்வி கேட்கிறாய்? எனக்கு எவ்வாறு மகிழ்ச்சி இருக்கும்? நீதான் இப்படி அநியாயம் செய்து விட்டாயே?' என்றேன். நான் சொல்வது அவளுக்கு விளங்காதது போல நடித்தாள். இவ்விதம் பேச்சு வளர்ந்து கொண்டே போயிற்று. என் அன்பை நிராகரித்தது பற்றியும், வீரபாண்டியனைக் காதலித்தது பற்றியும் அவள் மீது நான் குற்றம் சாட்டினேன். கிழவர் பழுவேட்டரையரை மணந்தது பற்றியும் குத்தலாகப் பேசினேன்.


'இளவரசே! முதலில் தாங்கள் என் காதலைக் கொன்றீர்கள் பிறகு என்னைக் காதலித்தவனை என் கண் முன்னால் கொன்றீர்கள் என்னையும் கொன்றாலொழியத் தங்கள் மனம் திருப்தியடையாது போலிருக்கிறது. நான் உயிரோடிருப்பதே தங்களுக்குப் பிடிக்கவில்லை. நல்லது என்னையும் கொன்று தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்!' என்று சொல்லித் தன்னுடைய இடுப்பில் செருகியிருந்த சிறிய கத்தியை எடுத்து நீட்டினாள்.

'நான் ஏன் உன்னைக் கொல்கிறேன்? நீயல்லவா என்னை உயிரோடு வதைத்துக் கொண்டிருக்கிறாய்!' என்றேன்.

கடைசியில், இப்போது நினைத்துப் பார்த்தாலும் வெட்கம் தருகிற வார்த்தைகளை என் வாய் சொல்லிற்று. 'இன்னமுங்கூட மோசம் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. ஒரு வார்த்தை சொல்லு! இந்த கிழவனை விட்டு விட்டு வந்துவிடுவதாகச் சொல்லு! உனக்காக நான் இந்த ராஜ்யத்தை விட்டு வந்து விடுகிறேன். இருவரும் கப்பல் ஏறிக் கடல் கடந்து தூர தேசத்துக்குப் போய் விடுவோம்!' என்றேன்.

நந்தினி அதைக் கேட்டுப் பயங்கரமாகச் சிரித்தாள். அதை நினைத்தால் இப்போது கூட எனக்கு ரோமம் சிலிர்க்கிறது. 'கடல் கடந்து தூர தேசத்துக்குப் போய் நாம் என்ன செய்வது என்கிறீர்கள்? விறகு வெட்டிப் பிழைக்கவா? அல்லது வாழைத் தோட்டம் போட்டுப் பிழைக்கவா?' என்றாள். 'அதெல்லாம் உனக்குப் பிடிக்காதுதான்! அர்ச்சகர் வீட்டில் வளர்ந்தவள் பழுவூர் ராணி ஆகிவிட்டாய் அல்லவா?' என்றேன்.

'இதோடு திருப்தியடைவதாக எண்ணம் இல்லை. சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் சக்கரவர்த்தினியாக வீற்றிருப்பதாக உத்தேசம். தங்களுக்கு இஷ்டமிருந்தால் சொல்லுங்கள், பழுவேட்டரையர் இருவரையும் கொன்றுவிட்டு, சுந்தர சோழரைச் சிறையில் அடைத்து விட்டு, சக்கரவர்த்தியாகி என்னைத் தங்கள் பட்டமகிஷியாக்கிக் கொள்கிறதாயிருந்தால் சொல்லுங்கள்!' என்றாள். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்


## அரசனும் புத்திசாலிக் குருடனும்

(நேற்றைய தொடர்ச்சி)

வியாபாரியும் எதோ தெரியாம நடந்துடுச்சன்னு சொல்லி எல்லா வைரத்தையும் இனாமா கொடுத்துட்டு நழுவிட்டான். ராஜாவுக்கு ஆச்சர்யம் எப்படிப்பா கண்டு பிடிச்ச? விபரமா சொல்லு? குருடன் சொன்னான்.

ராஜா! வெயில்ல வைரம் சூடாகாது. ஆனா கண்ணாடி சூடாகும். அதனால சூடானது எல்லாம் கண்ணாடின்னும் சூடு ஆகாதது எல்லாம் வைரம்ன்னும் பிரிச்சேன்.

ராஜா சந்தோஷமா பாக்கெட்ல கைய விட்டு ஒரு டோக்கன் எடுத்து குருடன் கிட்ட குடுத்து போடா மேற்கு வாசலுக்கு. டோக்கன குடுத்து பட்டை சாதம் வாங்கி சாப்பிட்டு சந்தோஷமா இருன்னு சொல்லி அனுப்பி வச்சார்.



இப்படியே கொஞ்ச நாள் போச்சு. ராஜா தன் மகனுக்கு கல்யாணம் பண்ண வரன் தேட ஆரம்பிச்சார். பக்கத்து ஊர்ல இருந்து எல்லாம் இளவரசி கொடுக்க தயாராக இருந்தாங்க. ராஜாவுக்கு குழப்பம்.

யாரை தேர்ந்து எடுப்பதுன்னு. மந்திரிகிட்ட கேட்கிறார். எல்லா பொண்ணுமே நல்லா இருக்குன்னு பயந்து கிட்டே மந்திரி சொல்றார். ராஜா பார்த்தார். கூப்புடுங்கடா அந்த குருடனை. குருடன் வந்தான்.

ராஜா குருடன் கிட்ட சொன்னார். என் மகனுக்கு கல்யாணம் பண்ண பொண்ணு பார்க்குறேன். எந்த ராஜாவோட குமாரி சரியா இருக்கும்ன்னு காரண காரியத்தோட தெளிவா சொல்லு. குருடன் சொன்னான்.

ராஜா! அடுத்த நாட்டை விட்டுட்டு அதுக்கு அடுத்த நாட்டு ராஜாவோட பொண்ண பாருங்கன்னான். அந்த ராஜா உங்க சம்பந்தி ஆயிட்டா பக்கத்து நாட்டு ராஜா உங்க ரெண்டு பேருக்கும் நடுவில இருப்பான் அப்போ எல்லை பிரச்சினை வராது. பொண்ண கொடுத்ததால அந்த இடைப்பட்ட பகுதில பிரச்சினை வராம பார்த்துப்பான்.

ராஜாவுக்கு ஒரே குஷி. சபாஷ்! இந்தா டோக்கன். அரண்மனையின் வடக்கு வாசலுக்கு போடா. பட்டை சாதம் குடுப்பாங்க. வாங்கி சாப்பிட்டு சந்தோஷமா இரு அப்படின்னார்.

குருடனும் போய்ட்டான். கொஞ்ச நாள் போச்சு. ஒரு நாள் ராஜா அந்த குருடனை தன்னோட அந்தரங்க ஆலோசனை அறைக்கு வர சொன்னார். டேய்!

நான் ஒன்னு கேட்பேன். சரியா காரண காரியதோட சொல்லனும். அப்படின்னார். குருடனும் சரின்னான். இந்த ஊர்ல எல்லோரும் என்னைய பிச்சைகாரனுக்கு பிறந்த பய அப்படின்னு சொல்றாங்க. இதுக்கு நீ என்ன சொல்ற.? சரியா சொல்லனும் என்றார்.

குருடன் அமைதியா இருந்தான். பதிலே பேசல. ராஜா திரும்ப கேட்டார். குருடன் அமைதியா சொன்னான். ராஜா நீங்க திரும்ப திரும்ப கேட்கறதால சொல்றேன். நெசமா நீங்க பிச்சைகாரனுக்கு பிறந்தவன் தான். அதுல சந்தேகமே வேணாம் அப்படின்னான்.

ராஜாவுக்கு தூக்கி வாரிப்போட்டுது. ரொம்ப வருத்தம். ஏன்டா என்னய பார்த்தா இப்படி கணிச்சே.? ன்னு வருத்தமா கேட்டார்.

ராஜா...முதல்ல குமட்டி காய பத்தி சொன்னேன். நீங்க சந்தோஷம் ஆயிட்டீங்க. ஆனா குடுத்தது பட்டை சாதத்துக்கு இலவச டோக்கன்.

நிஜமான ராஜாவா இருந்தா கையில இருந்த மோதிரத்தை கழட்டி குடுத்து இருப்பார்.

அப்புறம் கோடி கணக்குல வைரம் கிடைக்க வழி செஞ்சேன். நிஜமான ராஜாவா இருந்தா கழுத்துல இருந்த வைர மாலைய குடுத்து இருப்பார்.ஆனா நீங்க குடுத்தது பட்டை சாத டோக்கன்.

மூன்றாவது ஒரு ராஜ்ஜியமே உங்க கைகுள்ள வருவதற்கு வழி சொன்னேன். உண்மையான ராஜாவா இருந்தா நாலு கிராமத்த எழுதி குடுத்து இருப்பார்.

நீங்க குடுத்தது வடக்கு வாசல் பட்டை சாத டோக்கன்.

ஆக சோத்தை தாண்டி உங்க எண்ணம் போகல. உலகத்துலேயே பெரிய விஷயம் சோறுன்னு முடிவு பண்ணிட்டீங்க. இதுல இருந்து தெரியல.?

"நீங்க பிச்சைக்காரனுன்னு உங்கள் எண்ணங்களே தீர்மானிக்கின்றன.." (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மனிதனும் எனக்கு கீழானவன் அல்ல அது போல எவனும் எவனுக்கும் மேலானவன் அல்ல.
– தந்தை பெரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விபத்து மரணங்கள் தொடர்பில் தமிழ் எம்.பிக்களின் மௌனம்

வடபகுதியில் நாளாந்தம் நடக்கின்ற விபத்துக்களால் அருமந்த மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

விபத்தின் காரணமாக நேற்று முன்தினம் கோப்பாய்ச் சந்தியில் சமுர்த்தி முகாமையாளர் ஒருவர் மரணமடைந்தார்.

அதேபோல் இதற்கு முதல் நாள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்று விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார்.

நேற்றைய தினம் (15) மாங்குளம் பனிக்கன்குளம் பகுதியில் நடந்த விபத்தில் மூவர் பலியாகினர்.

இவ்வாறாக நாளாந்தம் வீதி விபத்துக்களால் மனித உயிர்கள் கொல்லப்படுகின்றன.

இதுபற்றி இவ்விடத்தில் பல தடவைகள் பிரஸ்தாபித்துவிட்டோம்.

எனினும் சம்பந்தப்பட்ட எவரும் நடவடிக்கை எடுப்பதாக இல்லை. அதிலும் குறிப்பாக வடபகுதிக்கான போக்குவரத்துப் பொலிஸார் இதுவிடயத்தில் மிகவும் அசமந்தமாகச் செயற்படுகின்றனர்.

இப்போது இங்கு இலஞ்சம் பெறுவது மட்டுமே நடந்தாகிறது.

இலஞ்சம் கொடுப்பதன் மூலம் தப்பித்துக் கொள்ள முடியும் என்ற மனநிலை சாரதிகளிடம் ஏற்பட்ட பின்னர் அவர்கள் கைத்தொலைபேசியில் உரையாடியவாறு வாகனத்தை ஓட்டுவர்.

வீதிச் சமிக்ஞைகளை பொருட்படுத்தாமல் தாம் நினைத்தபடி வாகனங்களை செலுத்துவர்.

இந்த அநியாயம் காரணமாக நாளாந்தம் நம் மண்ணில் நடக்கின்ற விபத்து மரணங்கள் தீராத் துன்பத்தை ஏற்படுத்திவிடுகின்றன.

ஆனாலும் இதுபற்றி எவரும் இம்மியும் கருசனை கொள்ளவில்லை எனும்போது, வீதி விபத்தில் உயிரிழப்பவர்கள் தமிழர்கள் என்பதால், அதுபற்றி கவனம் செலுத்த வேண்டியதில்லை என்ற மேலிடத்து அறிவுறுத்தல்கள் வடபகுதிக்கான போக்குவரத்துப் பொலிஸாருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கும் கிடைக்கப் பெற்றுள்ளதோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

சரி,அவர்கள்தான் அப்படி என்றால், நம் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குச் சென்றவர்கள்கூட, வீதி விபத்து மரணங்கள் குறித்து வாய்திறக்கவேயில்லை. இதுதான் புரியாத புதிராக உள்ளது.

உண்மையில், வடபகுதியில் இடம்பெறும் வீதி விபத்து மரணங்கள் குறித்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் போக்குவரத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி இருக்க வேண்டும்.

மறைந்திருந்து பொலிஸார் இலஞ்சம் பெறுவதில் ஆர்வமாக இருப்பதன் காரணமாகவே, சாரதிகள் வீதி விதிகளை பின்பற்றுவதில்லை என்ற உண்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

தவிர, பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளையும் பிரதேச செயலர்களையும் உள்ளடக்கியதான கூட்டங்களை நடத்தி நிலைமையை ஆராய்ந்திருக்க வேண்டும்.

ஆனால் இதுவரை நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனைச் செய்யவேயில்லை.

நம் சிற்றறிவுக்கு எட்டியவரை இதனைச் செய்வதற்கு காணி அதிகாரமோ பொலிஸ் அதிகாரமோ தேவைப்படாது.

ஆகையால் இதுவிடயத்தில் இனியேனும் காலம் தாழ்த்தாமல் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவசரமாக நடவடிக்கை எடுத்து வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற மரணங்களைத் தடுக்கவும் தவிர்க்கவும் ஆவன செய்ய வேண்டும்.

# பெரமுனவை பிளவுபடுத்துவதை ரணில் திறமையாக முன்னெடுப்பு

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(இரத்தினபுரி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்தும் அரசியல் காய் நகர்த்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையாக செயற்படுத்துகிறார்.

ராஜபக்ஷர்களுடன் ஒன்றிணைய வேண்டிய தேவை எமக்கில்லை. இருப்பவர்களையாவது ராஜபக்ஷர்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் மேலவை இலங்கை கூட்டணியின் உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணைய கோரிக்கை விடுத்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

விலகிச் சென்றவர்கள் மீண்டும் ஒன்றிணையலாம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தான் எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ராஜபக்ஷர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை எமக்கு கிடையாது. அரசியலில் நாங்கள் தனித்து சிறந்த முறையில் செயற்படுகிறோம்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த முறையில் அரசியல் காய் நகர்த்தலை முன்னெடுக்கிறார்.

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வகிக்கும் ஒரு தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும், அமைச்சு பதவி இல்லாத பிறிதொரு தரப்பினர் பஷில் ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவும் செயற்படுகிறார்கள்.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

ஆகவே விலகி சென்றவர்களை மீண்டும் இணைப்பதற்கு முன்னர் இருப்பவர்களை பொதுஜன பெரமுன தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு பொதுஜன பெரமுன துணை செல்கிறது.

69 இலட்சம் மக்களாணைக்கும் ஜனாதிபதியின் கொள்கைக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடு காணப்படுகிறது. ஆகவே பொதுஜன பெரமுனவே தவறை திருத்திக் கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## செல்வச்சந்நிதியானுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று பிற்பகல் 3.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மகோற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் மறுநாள் 26ம் திகதி காலை 8.00 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 30ம் திகதி புதன் கிழமை காலை எட்டு மணிக்கு தேர்த் திருவிழாவும் 31ம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

பக்தர்களின் வசதிகருதி விசேட போக்குவரத்து, பாதுகாப்பு, சுகாதார வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ம-7)

## முல்லையை சேர்ந்தவர் கொழும்பில் சடலமாக மீட்பு

கொழும்பில் தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சேர்ந்தவரும் கொழும்பு - மகரகம பிரதேசத்தில் வசித்து வருபவருமான தனபாலசிங்கம் வைகுந்தன் (வயது-39) என்ற நபரே சடலமாக மீக்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த 7 வருடங்களாகக் குடும்பத்தினருடன் மகரகமவில் வசித்து வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிகை அலங்கார நிலையத்தில் பணியாற்றி வந்த குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பணி முடிந்து வீடு திரும்புவதாக மனைவியிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் வீட்டுக்கு வருகை தராத அவரைக் குடும்பத்தினர் இரவு 7.30 மணியளவில் தேடிய போது வீட்டுக்கு அருகாமையில் சடலமாகக் கிடந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ம-7)

### மாணவ தலைவிக்கான போட்டி

## சக மாணவிகளுக்கு களை கொல்லியை தண்ணீரில் கலந்து கொடுத்த மாணவி

(கொழும்பு)

தனது வகுப்பறையில் உள்ள மாணவிகளுக்கு களை கொல்லியை குடிநீரில் கலந்து கொடுத்த மாணவி உள்ளிட்ட 6 மாணவிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாரம்மல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று முன் [illegible] சாலை நேரத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

சந்தேகமடைந்த மாணவி நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை நடைபெற்ற காலை கூட்டத்திற்கு வராமல் வகுப்பறையில் தங்கி சக மாணவிகளின் குடிநீர் போத்தல்களில் களைக் கொல்லி பொடியை கலந்து [illegible] தெரியவந்துள்ளது.

பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்ததில், குறித்த மாணவி அடையாளம் காணப்பட்டார்.

நெருங்கிய நண்பிகள் சிலரின் குடிநீர் போத்தல்களில் களைகொல்லி கலக்கப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களைகொல்லி கலந்த தண்ணீரை குடித்துவிட்டு சக மாணவிகள் வாந்தி எடுத்த நிலையில், அச்சமடைந்த மாணவியும் அதே தண்ணீரைக் குடித்துள்ளார்.

குறித்த பாடசாலையின் மாணவத் தலைவி பதவிக்கான போட்டியே இந்த சம்பவத்திற்கு அடிப்படையாக உள்ளதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாணவிகளின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

07

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



அந்த நாட்டில் முதலீடு செய்ய வெளி முதலீட்டாளர்களுக்கு தயக்கமிருக்காது. rating குறைந்துவிட்டால், எல்லாமே தலைகீழ்தான். கடன் தர முன்வர மாட்டார்கள். அப்படியே தந்தாலும் நிறைய நிபந்தனைகள், கூடிய வட்டிகள் இருக்கும். Fitch Ratings இலங்கையின் சர்வதேச இறையாண்மைக் கடன் மதிப்பீட்டு தரப்படுத்தலை "CC" இல் இருந்து 'C' ஆகக் குறைத்து விட்டது.

**அந்நியச் செலாவணி என்றால் என்ன?**

ஒரு நாட்டின் அரசிடம் இருக்கும் வெளிநாட்டுப் பணத்தைத் தான் அந்நியச் செலாவணி என்று கூறுகிறார்கள். ஆங்கிலத்தில் Forex Reserve என்று கூறுவார்கள். இலங்கை அதிகமாக இறக்குமதி செய்யும் நாடாக இருக்கிறது. எனவே எமக்கு வெளிநாட்டில் பொருட்களை வாங்க எமக்கு வெளிநாட்டுப் பணம் தேவை. அதற்கு எம்மிடம் அந்நிய செலாவணி கையிருப்பு இருத்தல் வேண்டும். அதனாலேயே உலக நாடுகள் ஒவ்வொன்றும் அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதிகரிப்பதிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றன. மேலும், இதனைக் கொண்டுதான் ஒரு நாட்டின் பொருளாதார வலிமையை மற்ற நாடுகள் எடை போடுகின்றன.

ஒரு நாட்டின் பணத்தை வேறு ஒரு நாட்டின் பண அளவில் குறிப்பிடுவது அந்நிய செலாவணி மாற்று விகிதம் எனப்படும். உதாரணமாக $1 =ரூ. 328.21 என்றும் அல்லது ரூ .1= 0.003$ என்றும் மாற்று விகிதத்தை குறிப்பிடலாம். அந்நியச் செலாவணி சந்தையில் ஒரு டொலரை வாங்கும்போது ஒரு விலையும் (இதனை-Bid என்பர்) அதே போல் விற்கும் போது ஒரு விலையும் (இதனை Offer என்பர்) குறிப்பிடுவர்: ஒரு டாலரை ரூ. 328.21-க்கு வாங்கவும், ரூ 340.21 விற்கவும் செய்வதாக குறிப்பிட்டால் இந்த இரண்டுக்கும் உள்ள இடைவெளி ரூபா 12 என்பது spread என்பர். இந்த spread தான் அந்நியச் செலாவணி சந்தையில் வியாபாரிக்கு ஏற்படும் லாபம். இந்த spread வியாபாரிக்கு வியாபாரி மாறும். ஒரு நாட்டின் பணம் அடிக்கடி பெரிய அளவில் தொடர்ந்து வாங்கப்பட்டும் விற்கப்பட்டும் இருக்குமேயானால், அதில் spread குறைவாக இருக்கும். ஒரு நாட்டின் பணம் எப்போதாவது சிறிய அளவில் வாங்கப்பட்டு விற்கப்பட்டால் அதில் spread அதிகமாக இருக்கும்.

அண்மைய புள்ளிவிபரங்களின் படி, 2023ஆம் ஆண்டின் மார்ச் இறுதி வரை, சீனாவின் அந்நிய செலாவணி கையிருப்பு தொகை 3 இலட்சத்து 18 ஆயிரத்து 390 கோடி அமெரிக்க டொலராகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், நாடுகள் தங்களது நாட்டின் நாணயத்தின் வெளிமதிப்பை (வெளிநாட்டில் அதன் மதிப்பை) நிலையான விகிதத்தில் பராமரிக்கவே அந்நிய செலாவணி கையிருப்பில் தீவிர கவனம் செலுத்தி வந்தன.


ஒரு நாடு தனது நாட்டின் நாணயமதிப்பில் அதிக ஏற்ற இறக்கம் ஏற்படும்போது வெளிநாட்டு நாணயச் சந்தையில் தலையிட, அரசின் வெளிநாட்டுக் கடனை சமாளிக்க அல்லது எதிர்பாராத வகையில் வெளிநாட்டு முதலீடு வெளியேறும் போது ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ள அந்நியச் செலாவணிக் கையிருப்பு ஒரு நாட்டுக்கு மிக அத்தியாவசியமான தேவையாகும்.




இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி 2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான கையிருப்பை படம் - b காட்டுகிறது. 2007ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான கையிருப்பை படம் – c காட்டுகிறது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த எந்தத் தேவைக்கும் அந்நியச் செலாவணி பயன்படுத்தப்படுகிறது. பணவீக்கம், நிதிப் பற்றாக்குறை, மத்திய வங்கியின் நிதி நிலை அறிக்கை ஆகியவற்றில் அந்நியச் செலாவணியின் தாக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக உள்ளது. ஒரு நாட்டின் அந்நியச் செலாவணி சந்தையில் நான்கு வகை நபர்கள் உண்டு. ஒன்று, அந்நியச் செலாவணியை வாங்கவும் விற்கவும் உள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள். இரண்டு இவர்களுக்காக அந்நியசெலாவணியை வாங்கும் விற்கும் வங்கிகள். மூன்று, அந்நியச் செலாவணி முகவர்கள். நான்கு, அந்நாட்டின் மத்திய வங்கி.

யாருக்கெல்லாம் அந்நியச் செலாவணி தேவை? இறக்குமதி செய்வோர், வெளிநாட்டில் முதலீடு செய்வோர், வெளிநாட்டில் பயணம் செய்வோர் இப்படி பலர். யாரெல்லாம் அந்நியச் செலாவணி விற்பார்கள்? ஏற்றுமதி செய்வோர், அந்நிய முதலீடு பெற்றவர்கள், நம் நாட்டில் பயணம் செய்யும் அந்நிய நாட்டினர். இவர்கள் தங்களின் தேவையை வங்கிகளிடம் தெரிவிக்க அவை அந்நியச் செலாவணியை வாங்கவும் விற்கவும் செய்வர்.




பொதுவாக வங்கிகள் தங்களுக்கிடையே இந்த பரிவர்த்தனையை செய்துகொள்ளமுடியும். ஆனால் அவர்கள் அந்நியச் செலாவணி முகவர்களை நாடுவர். ஏனெனில், அவர்களுக்கு எல்லா வங்கிகளில் உள்ள அந்நியச் செலாவணிகளின் அளவுகளும், அவற்றின் விலைகளும் தெரியும். அதே போல் அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தை நிலைப்படுத்த, மத்திய வங்கியும் அந்நியச் செலாவணி சந்தையில் பல நாடுகளின் பணங்களை வாங்கி விற்கும்.

**அந்நிய செலாவணி ஜோடிகள் மற்றும் விலை**

ஆன்லைன் (online) அந்நியச் செலாவணி வர்த்தகமானது EUR/USD,USD/JPY அல்லது USD/CAD மற்றும் பல போன்ற இணைத்தல் முறையில் நடைபெறுகிறது. இந்த ஜோடிகள் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

உதாரணமாக USD/CAD எடுத்துக் கொண்டால் USD என்பது அமெரிக்க டொலரையும் CAD என்பது கனேடிய டொலரையும் குறிக்கின்றது. இந்த இணைத்தலுடன், அவை ஒவ்வொன்றுடன் தொடர்புடைய விலையும் உள்ளது.

உதாரணமாக, விலை 1.2678 என்று வைத்துக் கொள்வோம். இந்த விலை USD/CAD ஜோடியுடன் தொடர்புடைய தாக இருந்தால், ஒரு USD வாங்குவதற்கு 1.2678 CAD செலுத்த வேண்டும். இந்த விலை நிர்ணயம் செய்யப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவைக்கேற்ப அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம். பொதுவாக அந்நியச் செலாவணி நாணயமாக அமெரிக்க டொலரே காணப்படுகிறது.

**அமெரிக்க டொலர் உலகின் வலிமையான நாணயம்**

அமெரிக்காவில் காகித நாணயத்தின் வரலாறு காலனித்துவ காலத்திற்கு முந்தையது ஆகும். ஆனால் இன்று நாம் அறிந்த முதல் அமெரிக்க டொலர்கள் 1914 இல் அச்சிடப்பட்டன. இது பெடரல் ரிசர்வ் சட்டம் (Federal Reserve Act) நிறுவப்பட்ட ஒரு வருடத்திற்குப் பின் அச்சிடப்பட்டன.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

கட்ட விடுமுறை நாளை வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி ஒகஸ்ட் 28ம் திகதி மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதன்படி, பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைக்கான இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஒகஸ்ட் 28ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## காணாமல்...

வலகம் சட்டத்தின் 11 (இ) பிரிவின் ஏற்பாட்டுக்கமைய, குறித்த அலுவலகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் புரிதலுக்கு வழிகாட்டு நெறிகளையும் வழங்குதல் வேண்டும்.

மேலும், இவற்றை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை உள்ளடக்கக் கூடியவையான விதிகளையும் வழங்குதல் வேண்டும்.

அதற்கமைய, சட்டமா அதிபரால் வழங்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளைக் கருத்தில் கொண்டு குறித்த வழிகாட்டுநெறி தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான பத்திரம் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சரினால் நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது. (ம-7)

## தலைமன்னார்...

மன்னார்மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவில் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலைமன்னாருக்கும் கொழும்புக்கும் இடையில் கடுகதி புகையிரத சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி சேவையானது ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மேலும் இந்திய மற்றும் இலங்கைக்கான பயணத்தை இலகுவாக்கும் வகையில் குறித்த சேவை அமையும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சீனித் தொழிற்...

மிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மன்னார் மடு மாதா தேவாலய திருவிழாவில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது,

"மடு தேவாலய வருடாந்த திருவிழா என்பது எமது நாட்டு கலாசாரத்தின் ஒரு அங்கம் என்றே கூற வேண்டும். இந்தத் திருவிழாவை தேசிய நிகழ்வாகக் கருதி அதனைப் பாதுகாக்கவும் தொடர்ச்சியாக நடத்தவும் தேவையான ஆதரவை அரசாங்கம் வழங்கி வருகிறது. அத்தோடு வருடாந்த மடு திருவிழாவை நடத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து அருட்தந்தையர்களுக்கும் அரசாங்கம் சார்பில் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

மடுமாதாவிடம் பிரார்த்தனை செய்து ஆசீர்வாதம் பெற ஏராளமான பக்தர்கள் இங்கு வருகிறார்கள். கடந்த வருடம் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, பெருமளவான மக்கள் இங்கு வந்து மடுமாதாவின் ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் நாடினர். அந்த கடினமான நிலைமையில் மடு மாதாவின் ஆசீர்வாதமும் எமக்கு பலமாக அமைந்தது என்பதை குறிப்பிட வேண்டும்.

மடு மாதா குடிகொண்டிருக்கும் இந்த மன்னார் பிரதேசம் அதிகளவு புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைக்கொண்ட பிரதேசமாகும். இங்கு கிடைக்கும் சூரிய சக்தி, காற்றாலை மற்றும் பசுமை ஆற்றல் மூலம் மன்னார் மாவட்டத்தை வலுசக்தி மைய மாக உருவாக்க முடியும். மேலும், பூநகரியை எரிசக்தி கிராமமாக உருவாக்க திட்டமிட்டுள்ளோம்.

இந்த புனித பூமியும், வனமும் பாதுகாக்கப்படும் வகையிலேயே இந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

மேலும், இப்பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளின் போது இங்குள்ள அருட்தந்தைகளின் ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் பெறுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன்.

சார்ள்ஸ் நிர்மலநாதனின் வேண்டுகோளுக்கு அமைய வவுனியாவில் சீனி தொழிற்சாலையொன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த அனைத்து செயற்பாடுகளின் ஊடாகவும் 2048ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்ப எதிர்பார்க்கிறோம். அதற்கு உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன்" என்று ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## மாங்குளத்தில்...

லேரியா புதிய நகரைச் சேர்ந்த ரங்க மதுசங்க (வயது-37) மற்றும் வெல்லம் பிட்டியைச் சேர்ந்த சரத்குமாரசிறி (வயது-58) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

வீதிக்கருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் பின்பகுதியில் வான் மோதிய நிலையில் குறித்த லொறி முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் போது பின்னால் இருந்த லொறியின் சாரதி வாகனத்தை விட்டு இறங்கி இருந்த நிலையில் இரண்டு லொறிகளுக்கு இடையில் சிக்கி பலத்த காயங்களுக்கு உள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் பின்பகுதியில் பயணித்த ஒருவரும், வானின் முன் இருக்கையில் பயணித்த நபர் ஒருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகி மாங்குளம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளனர்.

மேலும், வானில் பயணித்த மூன்று பெண்களும் லொறியில் பயணித்த ஆண் ஒருவரும் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், லொறியில் பயணித்த மூன்று ஆண்கள் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,299)

## அடுத்த மாதம் Q.R இல்லை

### அமைச்சர் கஞ்சன

(கொழும்பு)

தேசிய எரிபொருள் அனுமதி அல்லது கியூஆர் முறையை இடைநிறுத்துவது குறித்து அடுத்த மாதம் பரிசீலிக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இல்லையெனின், வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்வெட்டு ஏற்படும் அபாயம் தற்போது வரை இல்லை என்று அமைச்சர் கூறினார்.

தென் மாகாணம், தேசிய கட்டத்துடன் இணைக்கும் கேபிள் பிரிவு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் திறக்க முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (ம-7)


மெகா பவர்
திகதி 15/08/2023 சீட்டிழுப்பு இலக்கம் 1555
E 08 35 72 75 76
67519

தன நிதானய
திகதி - 2023.08.15 சீட்டிழுப்பு இலக்கம் - 1237
Q 06 15 39 47 Q
08536

Lucky 7
திகதி 15.08.2023 சீட்டிழுப்பு இலக்கம் 0033
L7 இலக்கம் 3 1
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 3 8 6 6 6 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3449 சீட்டிழுப்பு திகதி 15.08.2023
O 21 23 54 60
O 68875

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.08.15 சீட்டிழுப்பு இலக்கம் 516
மேடம் 11 17 24 30 மேடம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/15 சீட்டிழுப்பு இலக்கம் 5207
C 9 6 5 7 8 5

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2181 வர்ணம் இள நீலம் சீட்டிழுப்பு திகதி 2023.08.15 தினம் செவ்வாய்க்கிழமை
01 40 47 56 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,161,052.40
12 22 39 72 Y

சனிதா
திகதி 2023.08.15 வெற்றி வாரம் 4342 வர்ணம் பச்சை
06 20 30 49 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,341,072.00
25 28 52 65 M

சசிரி
வெற்றி வாரம் 363 சீட்டிழுப்பு திகதி 2023.08.15 ஊதா
11 13 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,345,040/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3893 வர்ணம் சிவப்பு சீட்டிழுப்பு திகதி 2023.08.15 தினம் செவ்வாய்க்கிழமை
01 25 30 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,133,228/-
05 32 50 58

கப்ருக
திகதி 2023.08.15 வெற்றி வாரம் 1357
F 39 25 43 62 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 428,494,774.20
18 51 64 74 M
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை வெற்றி வாரம்: 2007 சீட்டிழுப்பு திகதி: 2023.08.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,693,448/-
09 21 49 69 A
56 59 74 75 H


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

மாகாண சுகாதார பணிப்பாளரால் நியமிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் கடந்த 4 ஆம் திகதி குழந்தை பேற்றிற்காக அனுமதிக்கப்பட்ட கர்ப்பவதி மற்றும் அவரது கணவருடன் பிரசவவிடுதியில் கடமையிலிருந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவர் முரண்பட்ட நிலையில் குழந்தை பிறந்த பின்னரும் குறித்த முரண்பாடு தொடர்ந்து நிலையில் அவ்விடயம் தொடர்பாக குழந்தையின் தந்தையால் முகப்புத்தகத்தில் பகிரப்பட்டிருந்தது.

குறித்த பதிவில்,

கடந்த 4ஆம் திகதி வவுனியா பொது வைத்தியசாலைக்கு மகப்பேறுக்காக அனுமதிக்கப்பட்ட பெண்ணுக்கும் அவருக்கு பிறந்து 10 நாட்களான சிசுவுக்கும், தாதியர் ஒருவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக சிகிச்சையளிக்க மறுத்துள்ளனர்.

வைத்தியசாலையின் 7 ஆம் விடுதி குழந்தைகள் பிரிவில் உள்ள தாதியர்கள், தலைமை தாதியர் மற்றும் பயிற்சியில் உள்ளவைத்தியர் குறித்த பெண்ணின் கணவருக்கு உங்கள் குழந்தைக்கு சிகிச்சை அளிக்க முடியாது எனக் கூறியுள்ளார்.

உங்களால் சிகிச்சை அளிக்க முடியாது எனில்லாமா (Lama) முறை அடிப்படையில் அந்தப் பெண்ணின் கணவர் தம்மை விடுவிக்குமாறு கோரி விடுகைப் பத்திரத்தில் 12.08.2023 அன்று இரவு 10 மணியளவில் கையெழுத்து இட்ட பிற்பாடும் அடுத்த நாள் மாலை 3 மணிவரை சிகிச்சையும் அளிக்காமல் தாய்சேய் இருவரையும் விடுதியிலேயே வைத்துள்ளனர்.

வவுனியா வைத்தியசாலை பணிப்பாளரது கவனத்திற்கு கொண்டு சென்றும் அலட்சியப் போக்குடன் செயற்பட்டதுடன் தாதியர்கள் 13.08.2023 அன்று மதிய நேர தாய்க்குரிய மருந்துவில்லைகளையும் வழங்க மறுத்துள்ளனர்.

குறித்த பெண்ணுக்கு அறுவை சிகிச்சை மூலம் குழந்தை கிடைத்ததால் வில்லைகளை வழங்காது விட்டதால் வலியால் பெரும் அவஸ்தை உற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்த தகவல்கள் சமூகவலைத் தளங்களில் வெளிவந்த நிலையில் கடும் விமர்சனம் எழுந்தது.

இவ்விடயம் வட மாகாண ஆளுனரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக ஆளுனரின் ஆலோசனைக்கமைய வட மாகாண சுகாதார பணிப்பாளர் நேற்று காலை வவுனியா வைத்தியசாலைக்கு வருகை தந்து வைத்தியசாலையில் கலந்துரையாடியதுடன் மூவர் கொண்ட குழுவை விசாரணைக்காக நியமித்துள்ளார். (ம-7.250)

## அதிகார...

விழுமியமிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனை பேரவையின் இரண்டாம் கட்டம் நேற்று காலி மாவட்டத்தை இலக்காக் கொண்டு காலி நகரசபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலரும் பேசிக் கொண்டிருக்கும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் இன்றும் நாளையும் ஒரே நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம் ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகார பரவலாக்கலை நடைமுறைப்படுத்த எதிர் பார்ப்பதாகவும், ஒரு நாட்டின் ஒருமைப் பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம் என்றும், நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும், இன்று இவை அச்சுறுத்தலுக்குள்ளாகி இருப்பதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மகா சங்கத்தினரின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சிறந்த முறையில் பெற்றுக்கொண்டு பாதகமான காரணிகளை நீக்கி சாதகமான காரணிகளுடன், சமய சேவை,சமூக சேவை மற்றும் முற்போக்கு அரசியல் பயணத்தை முன்னெடுக்கும் சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தி திகழ்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம் என்றும், நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள விசேட இடம் எப்போதும் பாதுகாக்கப்படும் எனவும்,ஏனைய மதங்களும் சமயங்களும் பாதுகாப்பாக இருக்க செயற்பட வேண்டும் எனவும்,நாட்டில் பிளவு ஏற்பட்டால், நாட்டின் தேசிய பாதுகாப்பு பற்றி பேசுவதில் அர்த்தமில்லை என்றும், அந்தப் பிரிவினையை இல்லாதொழிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

## 13 ஐ பலவந்த...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"13 ஆவது திருத்தச்சட்டம் என்பது நடைமுறையில் இருக்கும் ஒன்றாகும். இதனை முழுமையாக நடைமுறைப் படுத்த பாராளுமன்றின் அனுமதியைத்தான் ஜனாதிபதி கோரியிருந்தார்.

எந்தவொரு கட்சியினதோ அல்லது தனி ஒரு உறுப்பினரினதோ அனுமதியின்றி, ஒட்டுமொத்த பாராளுமன்றமும் 13 தொடர்பாக எந்தநிலைப்பாட்டில் உள்ளது என்பதே முக்கியமாகும்.

13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதா அல்லது அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதா என்பதற்கு பாராளுமன்றின் அனுமதி தேவைப்படுகிறது.

பாராளுமன்றம் இதற்கு இணங்காவிட்டால் திருத்தங்களை சட்டமாக்க முடியாது.

மேலும், 13 இற்கு பாராளுமன்றம் உடன்பாடில்லை என்றால் பலவந்தமாக இதனை முழுமையாக் நடைமுறைப் படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வாவின் கருத்தை அரசாங்கம் என்ற ரீதியில் நாம் வன்மையாக கண்டிக்கிறோம். நாம் பல தசாப்தகாலமாக குண்டுச் சத்தத்துடனும் துன்பத்துடனும் வாழ்ந்தவர்கள்.

இந்த நிலையில், இவரது கருத்தானது சில அடிப்படைவாதிகளால், நாட்டின் கீர்த்தியை சீர்குலைக்க பயன்படுத்தப்படும் அபாயமும் காணப்படுகிறது.

சர்வதேச ரீதியாக இது தாக்கத்தை செலுத்தும். நாம் இதுவரை அனுபவித்த துன்பங்களே போதும்.

இனவாதம், மதவாதம் உள்ளிட்ட ஏனைய தரப்பினருக்கு சாதகமான அடிப்படைவாதக் கருத்துக்களை அனைத்து மக்களும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

குரோத பேச்சுக்களால் நாட்டில் மீண்டும் அமைதியின்மை ஏற்பட்டால் நாம் அனைவரும்தான் பொதுவாக பாதிப்படைவோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16686) 076 825 7716 (ஆகாஸ்)

பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு காட்வெயர் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

- மனேஜர் Lanka Tile Showroom ஆண்; சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்
- Lanka Tile விற்பனையாளர் ஆண்
- விற்பனைப் பிரதிநிதி சீமெந்து ஆண்
- கணக்குப்பதிவாளர் ஆண்/ பெண்

மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.

தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் அளிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

குறிப்பு: நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றளவு தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. (C-7075)

குரு காட்வெயர்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
077 743 5265

வேலைவாய்ப்பு

நாடளாவிய ரீதியில் முன்னணி வகிக்கும் எமது World Entrepreneurs நிறுவனத்தின் புதிய கிளைகளின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தரம் 10, O/L, A/L படித்த இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ளவுள்ளது. 3 மாத கால அனுபவத்தின் பின்னர் EPF, ETF கவர்ச்சிகரமான அடிப்படை சம்பளம் மற்றும் பெறுமதிமிக்க சான்றிதழ் என்பன வழங்கப்படும்.

பயிற்சி காலத்தின் போது வருமானமாக

1 ஆம் மாதம் - 24,500
2 ஆம் மாதம் - 32,000
3 ஆம் மாதம் - 37,500

வழங்கப்படும். உங்கள் தகுதிக்கேற்ப பதவிகளை பெற்றுக் கொள்ள முடியும். உங்கள் விபரத்தினை 077 028 7429 எனும் இலக்கத்திற்கு Whatsapp செய்யவும். வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும். (16722)

மேலதிக தகவல்களுக்கு : 021 722 3317 அழைக்கவும்
075 517 9043, 077 985 8580

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/= (16349)
T.P: 077 544 8503

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 32 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு நிலப்பரப்பு

- மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 K மீற்றர் தூரம்
- நான்கு நான்கு பரப்பாக பிரக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின்.விலை (5 இலட்சம் ரூபாய்)
- பின் பக்கம் உள்ள காணி 1 பரப்பு 250,000 (இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) மட்டும்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று

(16723)

076 057 0354
076 826 0354

WORK IN UK
WORK PERMITS
CONSTRUCTION WORKERS
- 5 YEAR WORK PERMITS
- BRICK LAYERS
- SHUTTERING CARPENTERS
- SHUTTERING JOINERS
- STEEL FIXERS
- ELECTRICIANS
- PLUMBERS
- STEEL ELECTORS FOR STRUCTURES

CIMS COLLEGE 0777-068-777

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்



CIMS COLLEGE (C-7076)
0777-068-777
49A சப்பல் லேன், யாழ்ப்பாணம்

காணி விற்பனைக்கு

நல்லூர் சங்கிலியன் வீதிக்கு அருகாமையில் இருக்கும் பண்டாரிக்குளம் வீதியில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (16691)

தரகர் தேவையில்லை

077 214 0483
077 655 5395

தென்னந்தோட்டம் விற்பனைக்கு

புதிய தென்னை, கயூமரம், மாந்தோப்பு வயல் அடங்கலாக சகல வசதிகளுடன் 13 ஏக்கர் விற்பனைக்கு உண்டு. (16724)

077 873 0129
அல்லிப்பளை


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org